நவம்பர் - டிசம்பர் 2025

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் காட்சிகள்

- வெண்கல சர்ப்பம்
- அர்ப்பணிப்புள்ள ரூத்
- கட்டுபவர்களால் நிராகரிக்கப்பட்ட கல்
- யோனா
- இயேசுவின் பலியின் பாடங்கள்
- கிறிஸ்துவைப் பற்றிய முன்னோட்டங்கள்

# பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் காட்சிகள்
## ஆதியிலே



பல கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்களிலும் கவனம் செலுத்த விரும்புகிறார்கள். இருப்பினும், அப்போஸ்தலன் பவுல், "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது... அவைகள் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." (1தீமோத்தேயு3:16,17)என்று கூறினார். இந்த ஞானமான அறிவுரை, இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடையில் ஒரு அற்புதமான இணக்கத்தைக் காண நம் மனதைத் திறக்கிறது.

இந்த இதழில், தேவன் நம் ஆண்டவரின் பணியை எவ்வாறு முன்னறிவித்தார் என்பதைப் பார்க்க ஒரு சுருக்கமான பயணத்தை மேற்கொள்கிறோம். விசுவாசத்தை பலப்படுத்தும் இந்த அணுகுமுறை, உண்மையான நிகழ்வுகள் நடை பெறுவதற்கு முன்பே எது நடைபெறும் என்பதை நம் பரலோகத் தந்தை தெளிவாகவே அறிந்திருந்தார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் ஒரு ஞானமும் ஒழுங்கும் நிறைந்த திட்டத்தின் மூலம் மனிதனின் விதியைக் கட்டுப்படுத்துகிறார். நமக்கு குறைந்த இடமே இருக்கும் காரணத்தினால், தீர்க்கதரிசன சம்பவங்களின் முழுமையான பட்டியல் இணைக்கப்பட்ட குறிப்பில் வழங்கப்பட்டுள்ளது.

வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு இஸ்ரயேலர் பயணித்தபோது அவர்கள் முறுமுறுத்தலின் விளைவுகளை "**வெண்கலச் சர்ப்பம்**" என்ற பாடம் விவரிக்கிறது. கொள்ளிவாய் சர்ப்பங்கள் அனுப்பப்பட்டன, பல இஸ்ரயேலர் இறந்தனர். அவர்கள் மனந்திரும்பியவுடன், வேதனையிலிருந்து விடுவிக்கப்படுவதற்காக ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உருவாக்க வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டார். அந்த விக்ரகத்தை பார்க்கும் எவரும் இரட்சிக்கப்படுவார்கள். அது இயேசுவை விசுவாசத்தோடு பார்த்து அவருடைய பலியை ஏற்றுக்கொள்வதற்குப் பொருத்தமான அடையாளமாக இருந்தது.

"**இரட்சகரான சுதந்தரவாளி**" என்ற பாடம்,வயதான மனிதரான போவாஸுடனான ரூத்தின் அன்பின் கதையை விவரிக்கும் ரூத் புத்தகத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. ஒரு "நெருங்கிய சுதந்தரவாளியாக", போவாஸ் ரூத்தின் மீது தனது போர்வையை விரித்து, அவளைத் தன் பராமரிப்பில் எடுத்துக் கொள்ளும்படி கேட்கப்பட்டார். நமது கர்த்தர் தனது சொந்த மணவாட்டியை ஏற்றுக்கொண்டு, மீட்பின் தேவையான விலையை வழங்குவதை இது அழகாக காட்டுகிறது.

"**கட்டுபவர்களால் நிராகரிக்கப்பட்ட கல்**" என்ற பாடம், நிராகரிக்கப்பட்ட கல், மூலைக்கல்லாக மாறும் உருவகத்தை பரிசீலனை செய்கிறது. இஸ்ரயேலின் மத குருக்கள் கட்டிடக் கலைஞர்கள் ஆவர் - அவர்கள் ஒரு புதிய ஆவிக்குரிய சபையின் தலைவராக வரவிருந்த கர்த்தரை நிராகரித்தனர். தேவனின் உண்மையான வழிபாட்டை மீட்டெடுக்கும் பணியில் பங்குபெற சிறப்பாக தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களால் இந்த சபை உருவாக்கப்படும்.

நினிவேயில் பிரசங்கிக்க யோனா தீர்க்கதரிசி மறுத்ததை, இஸ்ரயேலர் தேவனுக்கு ஆரம்பத்தில் கீழ்ப்படியாததன் அடையாளமாக இருப்பதை "யோனா" என்ற பாடம் விவரிக்கிறது. பெரிய மீனின் வயிற்றில் யோனா இருந்த நேரத்தை தாம் கல்லறையில் இருந்த நேரத்திற்கு சமன் செய்தபோது இயேசு மற்றொரு அம்சத்தைச் அதனோடே சேர்த்தார். யோனா இறுதியில் நினிவேயை மாற்றும் பணியின் ஈடுப்பட்டார், இது இராஜ்யத்தின் ஒரு படமாகும்.

"**இயேசுவின் பலியின் காட்சிகள்**" என்ற பாடம், இயேசுவின் பலியின் பல்வேறு தீர்க்கதரிசன விவரங்களை ஆராய்கின்றன. "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" அவர். இயேசு தனது மரண ஆண்டையும், அவர் சிலுவையில் அறையப்பட்டு நீரிழப்புக்கு ஆளாக நேரிடும் என்பதையும் அறிந்திருந்தார். அவரது ஆடைகள் அவரைத் துன்புறுத்துபவர்களிடையே பங்கு பிரிக்கப்படும் என்றும் அறிந்திருந்தார். அவரது பலியின் பலவிவரங்களை அறிந்திருந்தாலும், அவர் தன்னை நமது விலைமதிப்பற்ற மீட்பராகக் கொடுக்க தயாராக இருந்தார்.

"**கிறிஸ்துவை பற்றி முன்னனோட்டங்கள்**" என்ற பாடம், கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டிய பல்வேறு பழைய ஏற்பாட்டு நபர்களை ஆராய்கின்றன. இயேசு "பிந்தைய ஆதாமாக" இருந்தார். ஆபேலின் விலங்கு பலி, தேவனுடனான மனிதனின் உறவு இரத்த பலியை சார்ந்தது என்பதைக் குறிக்கிறது. பின்னர் இஸ்ரயேலை மீட்கும் 2பணியை செய்த மோசேயுடன் இயேசு ஒப்பிடப்படுகிறார், அவருடைய வாழ்க்கை பல வழிகளில் நம் கர்த்தரை பிரதிபலிக்கிறது. அவருக்கு பின் வந்த யோசுவா பின்னர் இஸ்ரயேலை வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்றார், இது கிறிஸ்துவின் இராஜ்யத்தின் வேலைக்கு பொருத்தமானதாக உள்ளது.

**நபம்பர் / டிசம்பர் 2025,**
**தொகுப்பு 107, எண் 6**


**வெண்கல சர்ப்பம்** 2
இரட்சிப்பு

**அர்ப்பணிப்புள்ள ரூத்** 6
இரட்சகரான சுதந்தரவாளி

**கட்டுபவர்களால் நிராகரிக்கப்பட்ட கல்** 11
நம்முடைய அஸ்திபாரம்

**யோனா** 18
மூன்று கலிலேயர்கள்

**இயேசுவின் பலியின் பாடங்கள்** 24
என் நீதியுள்ள ஊழியன்

**கிறிஸ்துவைப் பற்றிய முன்னோட்டங்கள்** 29
வளமான அடையாளங்கள்

**இன்றைய தீர்க்கதரிசனம்** 35
வரிகள் மற்றும் கட்டணங்கள்

**பிரசங்கி**
எவ்வளவு இனிமையான நாமம்

இரட்சிப்பு

# வெண்கல சர்ப்பம்



— Russel Marten

நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். " (எண்ணாகமம் 21:8)

எகிப்திய அடிமைத்தனத்தையும் வாதைகளையும் சகித்த பிறகு, இஸ்ரயேலர் சீனாய் மலைக்குச் சென்று அங்கு செல்லும் பயணத்தின்போது தொடர்ந்து முறுமுறுத்தனர். நாற்பது வருடங்களுக்குப் பிறகும் அவர்களின் முறையீடுகள் தெளிவாகத் தெரிந்தன, மேலும் இதற்காக அவர்களுக்கு ஒரு கொள்ளை நோய், விஷசர்ப்பங்கள்தேவைப்பட்டது.

எண்ணாகமம் 20 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சம்பவங்கள், அவர்களுடைய வனாந்தரப் பயணத்தின் 40 - வது ஆண்டில், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்கு நேர் தெற்கிலும், சவக்கடலுக்கு தென்மேற்கிலும், காதேசுக்கு அருகில் நடந்திருக்கலாம். அங்கே, இஸ்ரயேலர்களுக்கு தண்ணீர் இல்லை, மோசேயிடம் முறையிட்டனர். (எண்ணாகமம் 20:2)பின்னர் மோசேயும் ஆரோனும் யெகோவா தேவனிடம் சென்றார்கள். தண்ணீர் புறப்படுவதற்கு ஒரு கன்மலையிடம் பேசும்படி மோசேக்கு கட்டளையிடப்பட்டது. ஆனால் மோசே கன்மலையிடம் பேசுவதற்குப் பதிலாக, கன்மலையை இரண்டு முறை அடித்தார். அதை அடிப்பதற்கு முன், "மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடிவரச் செய்தார்கள், அப்பொழுது மோசே அவர்களை நோக்கி - கலகக்காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று..."(எண்ணாகமம் 20:10) சொன்னார். ஆனால் கர்த்தர் மோசேயின் மீதும் ஆரோனின் மீதும் கோபமடைந்து, அவர்கள் ஜனங்களின் பார்வையில் தம்மைப் பரிசுத்தப்படுத்தவில்லை என்று கூறினார். மோசேயும் ஆரோனும் தங்களுக்கே பெருமை சேர்த்துக் கொள்வதினால், அந்த அற்புதத்தின் உண்மையான மூலாதாரமாக கடவுளை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை. இதன் விளைவாக, மோசேயும் ஆரோனும் வாக்குப்பண்ணப்பட்டதேசத்திற்குள் நுழைய அனுமதிக்கப்பட வில்லை. (எண்ணாகமம் 20:12)

ஜனங்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைத்தாலும், அவர்களின் விசுவாசமின்மையே 21 ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள விஷப் பாம்புகளுக்கும் காரணமாக இருந்தது. இஸ்ரயேலின் 40 ஆண்டுகால அனுபவத்தின் ஆரம்பம் மற்றும் முடிவுக்கான விரிவான காரியங்கள் வழங்கப்பட்டுள்ளன, ஆனால் 37அல்லது அதற்கு மேற்பட்ட நடுப்பகுதிக்கான தகவல்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

இருப்பினும், நமக்குத் தெரிந்தவரை, அந்த தேசம் கடவுளுக்கு எதிராக முறுமுறுப்பது ஒரு பொதுவான வழக்கமாக இருந்தது. காதேசில் இருந்தபோது, மோசேயும் யோசுவாவும் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையத் திட்டமிட்டனர். (எண்ணாகமம் 20:16)கிழக்கிலிருந்து யோர்தானைக் கடக்க, சவக்கடலின் கிழக்குக் கடற்கரையை ஒட்டியுள்ள ஏதோம் தேசத்தைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஏதோம் வழியாக அமைதியான பாதையில் செல்ல பேச்சுவார்த்தை நடத்த அவர்கள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை (எண்ணாகமம் 20:14-21) மேலும் ஏதோமியர்களை கட்டாயப்படுத்தவோ அல்லது அவர்களுடன் சண்டையிடவோ வேண்டாம் என்று கடவுள் அவர்களிடம் கூறினார்.

இதன் விளைவாக, இஸ்ரயேலர்கள் கிழக்கு நோக்கி மேலும் பயணிக்க வேண்டியிருந்தது. இது அவர்களின் ஏற்கனவே நீண்ட பயணத்தோடு சுமார் 300 மைல்கள் சேர்ந்தது.

காதேசிலிருந்து தெற்கே அக்காபா வளைகுடாவின் வடக்குப் பகுதியை நோக்கிப் பயணித்து, அவர்கள் பெரிய பள்ளத்தாக்கிற்குள் நுழைந்தனர். இது தெற்கே மத்திய ஆப்பிரிக்காவிலிருந்து வடக்கே சவக்கடல் வரை நீண்டு கிடக்கும் ஒரே பெரிய பள்ளத்தாக்காகும். இது ஒரு பாலைவனப் பகுதி மட்டுமல்ல, மிகக் குறைவான உயரத்திலும் உள்ளது. காதேசிலிருந்து தெற்கே பயணித்த பிறகு, வடக்கு நோக்கித் திரும்பும் அவர்களின் பயணத்தின் பெரும்பகுதி கடல் மட்டத்திற்குக் கீழே இருந்தது, மேலும் வசந்த காலம் கோடை காலமாக மாறும் போது மிகவும் வெப்பமாக இருந்தது. இந்தப் பாதை ஏதோமுக்குக் கிழக்கேயும் அதன் வடக்கு எல்லையைச் சுற்றியும் அவர்களை அழைத்துச் சென்ற போது, அது மிக கடினமாக இருந்தது. "வழியினிமித்தம் ஜனங்கள் மனமடிவடைந்தார்கள்." (எண்ணாகமம் 21:4)

## தொடர்ந்து முறுமுறுத்தார்கள்

"ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி - நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை, இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்."(எண்ணாகமம் 21:5)தண்ணீர் பற்றாக்குறை குறித்து ஜனங்கள் முறையிட்டதும் மட்டுமல்லாமல், வழங்கப்பட்ட உணவையும் அவர்கள் மிகவும் வெறுத்தனர். இதனிமித்தம் இஸ்ரயேலுக்கு ஏற்பட்ட விளைவுகள் குறிப்பிடத்தக்கவை.



"அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார், அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரயேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய் - நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம், சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள், மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம்பண்ணினான்." (எண்ணாகமம் 21:6-7 )

இந்தப் பகுதி ஏராளமான விஷப் பாம்புகளுக்கு தாயகமாக உள்ளது, இவை இப்பகுதியின் வெப்பமான மற்றும் வறண்ட காலநிலையில் செழித்து வளரக்கூடியவை. சில சர்ப்பங்கள் கடித்தால் நரம்பு மண்டலத்தைத் தாக்கும் விஷம் செலுத்தப்படும், இதனால் பக்கவாதம் ஏற்பட்டு, முழு உடலும் "தீயில் எரிவது போல்" உணரப்படும். சர்ப்பம் பாவத்துடன் தொடர்புடையதாக காணப்படுகிறது. ஆதியாகமப் பதிவில், சாத்தான் ஒரு சர்ப்பமாகத் தோன்றியபோது பாவம் மனித குடும்பத்திற்குள் அறிமுகப்படுத்தப்பட்டது. இஸ்ரயேலரின் அனுபவத்தில், ஒரு சர்ப்பம் மீண்டும் பாவத்துடன் தொடர்புடையதாக காணப்படுகிறது.

## பரிந்துரை வழங்கப்பட்டது

"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி - நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து , அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை, கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படியே மோசே ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைத்தான், சர்ப்பம் ஒருவனைக் கடித்தபோது, அவன் அந்த வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்துப் பிழைப்பான்."(எண்ணாகமம் 21:8-9)

பல்வேறு மொழிபெயர்ப்புகள் பெரும்பாலும் செய்யப்பட்ட சர்ப்பம், பித்தளை (இன்னும் கண்டுபிடிக்கப்படாத செம்பு மற்றும் துத்தநாகத்தின் கலவை) அல்லது வெண்கலம் (செம்பு மற்றும் தகரத்தின் கலவை) என்று குறிப்பிடுகின்றன. ஆனால் சர்ப்பம் செம்பினால் செய்யப்பட்டிருந்தது. அதாவதுஆசரிப்புக் கூடாரத்தின் பிரகாரத்தில் சுத்தமான செம்பினால் செய்யப்பட்ட வெண்கல பலிபீடத்தின் மூடியைப் போலவே அது தூய்மையாக இருந்தது. செம்பு (ஒரு தூய தனிமம்) மனித பரிபூரணத்தின் ஒரு அடையாளமாகும். இது ஆசரிப்புக் கூடாரத்தில் உள்ள பிரகாரத்தில் தற்காலிகமாக நீதிமானாக்கப்படுதலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது, இது பூமிக்குரிய நிலையில் உள்ள தற்காலிகமான நீதிமானாக்கப்பட்ட நிலையைக் குறிக்கும்.

மறுபுறம், பொன் பரிசுத்த ஸ்தலத்திலும் மகா பரிசுத்த ஸ்தலத்திலும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது, இது தெய்வீகம், நீதிமான் மற்றும் ஆவிக்குரிய விஷயங்களை அடையாளப்படுத்துகிறது.

ஒரு சர்ப்பம் வடிவத்தில் விடுதலை வந்தது ஆச்சரியமாகவேத் தோன்றலாம். ஒரு செம்புப் பாம்பை உருவாக்கி அதை ஒரு மரக் கோலில் வைக்கும்படி மோசேயிடம் சொல்லப்பட்டது. சிலுவை அல்லது மரக் கம்பத்தின் அடையாளம், இயேசுவின் சிலுவையுடன் தொடர்புடையதாக இருப்பதால் எளிதில் அடையாளம்



காணமுடிகிறது. ஆனால் ஒரு சர்ப்பம் எப்படி சித்திரத்தின் ஒருபகுதியாக இருக்க முடியும் ? கிறிஸ்து பாவத்திற்கு மருந்தாக இருந்தால், ஒரு பாம்பு எப்படி குணப்படுத்துதலின் ஒரு பகுதியாக இருக்க முடியும் ? ஜனங்கள் உயிர் பிழைக்க, அதைப் பார்க்கும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

உண்மையில், அந்தச் சர்ப்பம் பாவநிவாரண பரிவர்த்தனையைத் துல்லியமாகக் குறித்தது. "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்." (2கொரிந்தியர் 5:21 ) என்று அப்போஸ்தலன் பவுல் எழுதினார்.

எல்லா பாவிகளையும் மீட்பதற்காக அவர் ஒரு பாவியாக நடத்தப்பட்டார்.

பாம்புக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை எளிமையானதாக இருந்தாலும், நித்திய ஜீவனுக்கான பாதை அவ்வளவு எளிதானதாக இருக்காது. பல சவால்கள் இருந்தாலும், அவரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்த்து அவருடைய தியாகத்தை ஏற்றுக்கொள்வதே பலருக்கு முதல் படியாகும். (சகரியா12:10)

## ஒரு ஆவிக்குரிய பாடம்

இஸ்ரயேலர்கள் தண்டிக்கப்பட்டு திருத்தப்பட்டது மட்டுமல்லாமல், ஆவிக்குரிய இஸ்ரயேலராகிய நமக்கு ஒரு நிலையான பாடமும் எழுதப்பட்டது. பாவத்தின் கொள்ளி வாய் பாம்பு நம் இனத்தைக் கடித்துவிட்டது, நாம் அனைவரும் இறக்கும் செயல் முறையை அனுபவித்து வருகிறோம். இயேசுவை விசுவாசிப்பதினால் மட்டுமே மீட்கும் விலையின் மூலம் நீடித்த நன்மைகளைப் பெற முடியும். மோசே செம்பு பாம்பைச் சுட்டிக்காட்டியது போல, பாவத்தால் கடிக்கப்பட்ட உலகத்திற்கு இரட்சகரை சுட்டிக்காட்டுவதே நமது பணியாகும்.

இந்தப் பகுதியின் எதிர் மாதிரியான முக்கியத்துவத்தைப் பற்றி நாம் யூகிக்க வேண்டியதில்லை, ஏனெனில், நம் ஆண்டவர் தாமே இதை நமக்கு தந்திருக்கிறார். "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். "(யோவான் 3:14,15) என்று இயேசு கூறினார்.

இங்கே, இயேசு இரவில் தம்மிடம் வந்த நிக்கொதேமுவிடம் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய வேலையைப் புரிந்துகொள்ள, அவர் ஆவியினால் பிறக்க வேண்டும் என்று இயேசு அவனிடம் கூறினார். அது நிக்கொதேமுவுக்குப் புரியவில்லை, அதனால் இயேசு வேறொரு அணுகுமுறையைப் பயன்படுத்தினார். இயேசு, செம்புப் பாம்புடன் இஸ்ரயேலருக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றிப் பேசினார், மேலும் அந்தப் பாம்பைப் போலவே, விசுவாசிப்பவர்கள் சுகமாக்கப்படுவதற்காக தானும் உயர்த்தப்படப் போவதாகக் குறிப்பிட்டார். மாம்சமான இந்த மனிதன் புரிந்துகொள்ள இது ஒரு எளிய பாடமாக இருந்தது. கூடுதலாக யோவான் 12:32ல்-

"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்."

அப்போஸ்தலன் பவுலும் இதை குறித்துக் கருத்து தெரிவித்தார்." அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்."(ரோமர் 8:3)

பாவத்தின் பாம்பினால் கடிக்கப்பட்டு அதன் உக்கிரமான துன்பங்களை அனுபவிக்கும் ஒவ்வொருவரும், இயேசுநிறைவேற்றினதைப் பார்த்து, அதில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது, அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். "(ஏசாயா 53:5, 6)

## எசேக்கியாவின் சீர்திருத்தம்

இந்த செம்பு சர்ப்பம் பற்றிய மற்றொரு குறிப்பும் உள்ளது. இந்த செம்பு சர்ப்பம் பாதுகாக்கப்பட்டு, எசேக்கியா இராஜா விக்கிரகாராதனையை நீக்கியதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாக்களிப்பட்ட தேசத்திற்குள் நுழைந்த பிறகு, செம்பு சர்ப்பம் சுமார் 700 ஆண்டுகள் பாதுகாக்கப்பட்டது. காலப்போக்கில், அது ஒரு புறமத விக்கிரகமாக மாறி இஸ்ரயேலர்களால் வணங்கப்பட்டது. எசேக்கியா இராஜாவான போது, செம்பு சர்ப்பம் உட்பட எல்லா வகையான விக்கிரகாரதனை வழிபாட்டையும் ஒழிக்க அவர் உறுதியாக இருந்தார்.

"அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளை

வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான், அந்நாட்கள் மட்டும் இஸ்ரயேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள், அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். " (2இராஜாக்கள் 18:4)

ஒருவேளை எசேக்கியாவின் விக்கிரக வழிபாட்டின் சுத்திகரிப்பு இராஜ்யத்தில் முற்பிதாக்களின் பணியை முன்னறிவிக்கலாம். எசேக்கியாவின் உன்னதமான வேலைகள் போலவே, சிலைகள், சிலுவைகள் அல்லது பிற உருவங்கள் போன்ற கிறிஸ்தவ அடையாளங்கள் உட்பட பல வகையான விக்கிரகாராதனைகளும் ஒழிக்கப்படும்.

## குணப்படுத்தலின் ஒரு அடையாளம்

ஒரு தடியைச் சுற்றி சுற்றப்பட்ட ஒரு பாம்பின் உருவம் குணப்படுத்துதலின் அடையாளமாக இருந்து வருகிறது. "அஸ்க்லெபியஸின் தடி" (rod of Asclepius)என்று அழைக்கப்படும் ஒரு பழக்கமான உருவம், அதே பெயரில் குணப்படுத்தும் கிரேக்க கடவுளாக இருந்தது. அந்த கடவுளைப் பற்றிய விளக்கங்களும் அந்த சிலையும் ஒரு சர்ப்பம் சுற்றி ஒரு தடியை வைத்திருப்பதைப் போன்று காட்டியது. இருப்பினும், இந்த கிரேக்க அடையாளத்தின் ஆதாரம் ஆராயப்படும் போது அது வேதாகமத்தில் உள்ள காரியம் என்பதற்கான சான்றுகள் உள்ளன.ஏராளமான கிரேக்கக் கதைகள் - சிருஷ்டிப்பு, ஜலப்பிரளயம் மற்றும் பாபேல் கோபுரம் உள்ளிட்ட பல்வேறு விவிலிய வரலாறுகளுக்கு இணையாக காணப்படுகிறது.

குணப்படுத்துதலின் கிரேக்க அடையாளம் வெறுமனே கொள்ளி வாய் சர்ப்பத்தின் விவிலியக் கதையிலிருந்து கடன் வாங்கப்பட்டது என்று சிலர் கருதுகின்றனர்.குணப்படுத்துதலின் அடையாளம் பழைய இஸ்ரயேலர்களுக்கு மட்டுமல்ல, மிக முக்கியமாக, நமது கர்த்தரால் தேசங்கள் குணமடைவதற்கும் பொருத்தமாக உள்ளது.

## சுருக்கம்

இஸ்ரயேல் தேசத்தினர் கடவுளைச் சோதித்துப் பல சந்தர்ப்பங்களில் முறையிட்டனர். அவர்களின் புகார்கள் எப்போதும் ஆதாரமற்றவை அல்ல. அவர்களின் முறையீடுகள் எப்போதும் தேவையற்றதாக இருக்கவில்லை. தண்ணீர் குறைபாடு மற்றும் ஊட்டமளிக்கும் உணவுப் பற்றாக்குறை, உண்மையான பிரச்சனைகளாக இருந்தன. இருப்பினும் சிக்கலான பிரச்சினைகள் எழும் போது அவற்றைத் தீர்க்க ஒரு சரியான வழி இருந்தது. கடவுளிடம் முறையிடும் அவற்றில் ஒன்றல்ல அவர் நம் தேவைகளை நம்மை விட நன்றாக அறிவார். அவரை பயபக்தியுடன் அணுகுவதும், அவர் மீது நம் நம்பிக்கையை வெளிப்படுத்துவதும் கடவுளிடம் பேசும் போது சரியான மனப்பான்மையாகும். தேவைப்படும் ஒவ்வொரு நேரத்திலும் அவருடைய வழிகாட்டுதலையும் உதவியையும் நாட அவர் நம்மை ஊக்குவிக்கிறார். இந்தக் கொள்கை "எனது காலைத் தீர்மானம்" என்பதில் நன்கு கூறப்பட்டுள்ளது. கர்த்தருடைய ஏற்பாடுகளில் அவர் எதை அனுமதித்தாலும் நான் முறுமுறுக்கவோ, வருத்தப்படவோ மாட்டேன், ஏனென்றால் என்ன நடந்தாலும் அவர் மேல் கொண்டவிசுவாசம் அவரை உறுதியாக நம்பும்."

"இஸ்ரயேலின் வனாந்தரப் பயணத்தில் பெற்ற பாடத்தைப் பாராட்டும்படி பவுல் சகோதரர்களுக்கு அறிவுறுத்தினார்."ஆகையால், பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே - இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், வனாந்தரத்திலே கோபமூட்டினபோதும், சோதனை நாளிலும் நடந்தது போல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் பிதாக்கள் என்னை சோதித்து, என்னைப் பரீட்சைப்பார்த்து, நாற்பது வருஷகாலம் என் கிரியைகளைக் கண்டார்கள். சகோதரரே, ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள். "( எபிரெயர்3:7-9,12)



**அர்ப்பணிப்புள்ள ரூத்**

# இரட்சகரான சுதந்தரவாளி

"நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்." (ரூத் 1:16)



ரூத்தின் புத்தகம் வயதான போவாஸுக்கும், ஏழை விதவையான ரூத்துக்கும் இடையில் மலர்ந்த ஒரு அன்பான கதையைச் சொல்கிறது. ரூத் தன் மாமியார் நகோமியிடம் கொண்டிருந்த ஆழ்ந்த பக்தி, அவள் மென்மையான மற்றும் உண்மையுள்ள இருதயத்தைக் காட்டுகிறாள். போவாஸ் மூலம், இது தாவீதின் வம்சாவழியையும், யூதாவின் அரச வம்சத்தில் சட்டப்பூர்வ வாரிசாக இயேசுவின் வம்சாவழியையும் இணைக்கிறது. இந்த நெகிழ்ச்சியான கதையில் பல தனிப்பட்ட பாடங்கள் உள்ளன. இது இயேசுவுக்கும் அவரது மணமகளுக்கும் இடையிலான அர்ப்பணிப்பு உறவை முன்னோக்கி சுட்டிக்காட்டுகிறது. ரூத்தின் மீட்பு, நமது உறவினரும் மீட்பருமான கிறிஸ்துவால் உலகம் பாவத்திலிருந்து மீள்வதை முன்னறிவிக்கிறது.

### மோவாப்பை விட்டு செல்வது

கிதியோனின் காலத்தில் (மறுபதிப்பு 3110:3), இஸ்ரயேல் தேசத்தைக் கடுமையான பஞ்சம் சூழ்ந்தது. பஞ்சத்திலிருந்து தப்பிக்க, எலிமெலேக்கு தன் மனைவியாகிய நகோமியையும், இரண்டு மகன்களான கிலியோன் மற்றும் மக்லோனையும் மோவாப் தேசத்திற்கு அழைத்துச் சென்றார்.

எலிமெலேக்கு இறந்த பின், மகன்கள் மோவாபியப் பெண்களான ரூத்தையும் ஓர்பாளையும் மணந்தார்கள். பத்து வருடங்களுக்குப் பிறகு, எலிமெலேக்கின் மகன்களும் இறந்துவிட்டார்கள். எலிமெலேக்கும் அவருடைய மகன்களும் இறந்த பின், இஸ்ரயேலில் பஞ்சம் நீங்கியதைக் கேள்விப்பட்ட நகோமி திரும்பிச் செல்ல முடிவு செய்தாள்.

ஓர்பாளும் ரூத்தும் மோவாபியப் பெண்களாக இருப்பதால், அவர்கள் தங்கள் சொந்த மக்களிடையே மறுமணம் செய்து கொள்ள அதிக வாய்ப்புள்ளது என்று யோசித்த நகோமி, அவர்களை மோவாபிலேயே தங்கும்படி கவனமாக ஊக்குவித்தாள். கண்ணீர் மல்க நடந்த ஒரு உரையாடலுக்குப் பிறகு, ஓர்பாள் மோவாபிலேயே தங்கினாள், ஆனால் ரூத் பிடிவாதமாக நகோமியுடன் இஸ்ரயேலுக்குத் திரும்புவதற்கு முடிவு செய்தாள். அவளுடைய கனிவான வார்த்தைகள் மிகுந்த உத்வேகமாக உள்ளது. "அதற்கு ரூத் - நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம், நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம்பண்ணப்படுவேன், மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர் என்றாள்." (ரூத் 1:16,17)நகோமி உறுதியாக நம்பினாள். ரூத்தின் மென்மையான அன்பின் வெளிப்பாடு உண்மையிலேயே தெய்வீகமானது.

### எலிமெலேக் இஸ்ரயேல் தேசத்தின் நிழல்

எலிமெலேக்கு என்ற பெயருக்கு "கடவுள் இராஜா" என்று பொருள்.இது இஸ்ரயேலர் கடவுளை ஆரம்பத்தில் அங்கீகரித்ததையும் அவருக்கான அவர்களின் அர்ப்பணிப்பையும்



விவரிக்கக்கூடும்.யூதாவின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராகவும், வாக்களிக்கப்பட்ட தேசத்தில் வாழ்ந்தவராகவும், எலிமெலேக்கு கடவுளின் தயவையும் ஆசீர்வாதங்களையும் அனுபவித்தார். ஆனால் பஞ்சம்,கஷ்டத்தை ஏற்படுத்தியபோது, அவர் விக்கிரகாராதனை நிறைந்த தேசமான மோவாபுக்குச் சென்றார், பின்னர் அங்கேயே இறந்தார்.

துன்பக் காலத்தில் வாக்களிக்கப்பட்ட தேசத்திலிருந்து இவ்வாறு புறப்பட்டது, மாம்ச இஸ்ரயேலர் தங்கள் கடினமான காலங்களில் கடவுளை நம்பத் தவறியதையும், அப்படிப்பட்ட காலங்களில் புறஜாதி மக்களிடையே செழிப்பைத் தேடும் விருப்பத்தையும் விளக்குகிறது.

எலிமெலேக்கின் இரண்டு மகன்கள்



மக்லோன், என்பதற்கு "நோய்வாய்ப்பட்டவர்" என்றும், கிலியோன், என்பதற்கு அதாவது "ஏங்கிக்கொண்டிருப்பவர்" என்றும் பொருள். மோசேயின் நியாயப்பிரமாணத்திலிருந்து விலகி வாழும் யூதர்களின் ஆவிக்குரிய நிலையை அவர்கள் பிரதிபலிக்கிறார்கள்.

## உம்முடைய போர்வையை விரியும், நீர் சுதந்தரவாளி என்றாள்

பெத்லகேமுக்குத் திரும்பிய பிறகும், நகோமியும் ரூத்தும் உயிர்வாழ்வதற்கான போராட்டம் தொடர்ந்தது. இதன் காரணமாக, அறுவடை செய்பவர்கள் விட்டுச் சென்ற தானியங்களுக்காக வயல்களில் கதிர் பொறுக்க ரூத் முடிவு செய்தாள்.இந்த ஏற்பாடு நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாக இருந்தது. இது ஏழைகளைப் பராமரிப்பதற்கான ஒரு வழியாக வழங்கப்பட்டது. (லேவியாராகமம் 19:9-10காண்க)ரூத், எலிமெலேக்கின் செல்வந்த உறவினரான போவாஸின் வயல்களில் கதிர் பொறுக்குவதைத் தேர்ந்தெடுத்தாள்.மோவாப்பை விட்டு நகோமியுடன் இருந்து கடவுளைப் பின்பற்றியதற்காக ரூத்தை போவாஸ் பாராட்டினார். அவள் சேகரிக்க கூடுதல் தானியங்களை விட்டு விடும்படி அவர் தனது ஊழியர்களுக்குக் கட்டளையிட்டார்.(ரூத் 2:15-16) இதைக் கேள்விப்பட்ட நகோமி, ரூத்தை போவாசின் வயல்களில் தொடர்ந்து கதிர் பொறுக்க ஊக்குவித்தார்.ரூத்துக்கு ஒரு கணவனைக் கண்டுபிடிக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நகோமி நினைத்து, போவாஸ் பகல் பொழுது முடியும் போது வயலில் தூங்கிய இடத்தைக் கண்டுபிடித்து, அவன் காலடியில் அப்பாவியாகப் படுத்துக் கொள்ளுமாறு அவளுக்கு அறிவுறுத்தினாள்.ரூத் போவாஸை நெருங்கத் தயாரானபோது, அவள் தன்னைக் கழுவி, எண்ணெய் பூசிக்கொண்டாள் (ரூத் 3:3) அவள் ஒரு புதிய ஆடையை அணிந்துகொண்டு, போவாஸ் ஓய்வெடுக்கும்போது அவரைத் தேடிச் சென்றாள்.

நள்ளிரவில், போவாஸ் திடுக்கிட்டு விழித்தெழுந்து, அவள் யார் என்று கேட்டார்.

"நீ யார் என்று கேட்டான், அவள், நான் உம்முடைய அடியாளாகிய ரூத், நீர் உம்முடைய அடியாள்மேல் உம்முடைய போர்வையை விரியும், நீர் சுதந்தரவாளி என்று" (ரூத் 3:9 ) பதில் அளித்தாள். போர்வையை விரிப்பது என்ற எபிரெய வார்த்தைக்கு அவள் மீது "தன் சிறகுகளை விரிப்பது" என்று பொருள். இது ஒரு தாய்ப் பறவை தன் குஞ்சுகளைப் பாதுகாப்பது போன்ற உருவகத்தை வெளிப்படுத்துகிறது. ரூத் தன் உறவினராக அவரிடம் கவனிப்பையும் பாதுகாப்பையும் கேட்டாள்.

நியாயப்பிரமாணத்தின்படி, எலிமெலேக்கு மற்றும் அவருடைய மகன்களின் உடைமைகளை மீட்டுக்கொள்ள ஒரு உறவினர் அல்லது பங்காளிக்கு உரிமை இருந்தது.

அவள் ஒரு நல்லொழுக்கமுள்ள பெண் என்பதைக் கண்டதால், போவாஸ் அவளுக்கு உதவுவதாக உறுதியளித்தார். இருப்பினும், எல்லாவற்றையும் மீட்டுக்கொள்ள போவாஸை விட நெருங்கிய உறவினர் ஒருவர் இருந்தார். மறுநாள், போவாஸ் இந்த நெருங்கிய உறவினரிடம் பேசி, எலிமெலேக்கிற்குச் சொந்தமானதை மீட்டுக்கொள்ளும் உரிமையைப் பற்றி விளக்கினார்.

மேலும், அந்த மீட்பில் ரூத்தை மணந்து, குழந்தைகளைப் பெற்று கொள்ள வேண்டும் என்றும் அவர் அவனிடம் கூறினார். இதைக் கேட்டதும், அந்த மனிதன் அதற்கு மறுப்பு தெரிவித்தார். மேலும் இந்த ஏற்பாட்டில் தனது சொந்த சுதந்திரம் கெட்டு போகும் என்று கூறி, பின்னர் போவாஸை தனது இடத்தைப் பிடிக்க ஊக்குவித்தார்.

## சுத்திகரிப்பு மற்றும் மீட்பு

போவாஸை அணுகுவதற்கு முன்பு ரூத் தன்னைக் கழுவிக் கொண்டது, திருச்சபை தனது பாவத்தையும் சுத்திகரிப்புக்கான தேவையையும் ஒப்புக்கொண்டதைக் குறிக்கலாம்.

ஆடைகளை மாற்றுவது, போவாஸுடன் நெருங்கிய உறவு கொள்ள வேண்டும் என்ற அவளுடைய விருப்பத்தைக் குறிக்கிறது, இது கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு அவருடைய நீதியால் உடுத்தப்பட வேண்டும் என்ற திருச்சபையின் ஒத்த விருப்பத்தைக் குறிக்கிறது.

போவாஸ் தன்னுடைய உறவினர் என்று ரூத் சொன்னபோது, எலிமெலேக்கின் முன்னாள் மனைவியாக தன்னை மீட்டுக்கொள்ளும்படி அவனிடம் கேட்டாள். (ரூத் 3:9)இறந்தவரின் குடும்பம், சொத்து மற்றும் சந்ததியினரைப்

பாதுகாப்பதற்கு ஒரு உறவினர் (பங்காளி)பொறுப்பாக இருந்தார். இது இயேசு மனிதராக இருந்தபோது மனுக்குலத்தின் "உறவினராக" இருந்ததைக் குறிக்கிறது. அவர் இப்போது இறந்துபோன ஆதாமின் சாபத்திலிருந்த மீட்பை வழங்குகிறார். (ஏசாயா61:10, வெளிப்படுத்துதல் 19:8, 1தீமோத்தேயு2:5-6)

ரூத் என்ற பெயருக்கு "தோழி, புத்துணர்ச்சி அல்லது திருப்தி" என்று பொருள். நகோமியுடன் அவளுடைய எதிர்காலம் நிச்சயமற்றதாக இருந்தாலும், ரூத் நகோமியுடன் உறுதியோடு இருந்தாள். விசுவாசம் என்பது திருச்சபையின் இயல்பான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் குணமாகும்.

## உன் செருப்பைக் கழற்று

"மீட்கிறதிலும் மாற்றுகிறதிலும் சகல காரியத்தையும் உறுதிப்படுத்தும்படிக்கு, இஸ்ரயேலிலே பூர்வகால வழக்கம் என்னவென்றால், ஒருவன் தன் பாதரட்சையைக் கழற்றி, மற்றவனுக்கு கொடுப்பான், இது இஸ்ரயேலிலே வழங்கின உறுதிப்பாடு." (ரூத் 4:7)

ஒருவரின் பாதரட்சையைக் கழற்றி இன்னொருவருக்குக் கொடுக்கும் வழக்கம், அவர் சம்பந்தப்பட்ட பொருட்களை மீட்டுக்கொள்ளும் உரிமையை விட்டுக்கொடுத்ததைக் குறிக்கிறது. முதல் உறவினரின் பாதரட்சையை ஏற்றுக்கொள்வதன் மூலம், எலிமெலேக்குக்கும் அவருடைய மகன்களுக்கும் சொந்தமானதை மீட்டு, ரூத்தை மணக்கும் தனது நோக்கத்தை போவாஸ் ஒப்புக்கொண்டார்.

இந்தச் சுருக்கமான, வழக்கமான பரிமாற்றத்தில், மனுக்குலத்தின் மீட்பின் ஒரு சித்திரத்தைக் காண்கிறோம். எலிமெலேக்குக்கும் ரூத் உட்பட அவரது மகன்களுக்கும் இருந்த அனைத்து உடைமைகளும் வாங்கப்பட்டன, மேலும் அவள் ஒரு நல்ல மற்றும் தாராள மனப்பான்மை கொண்ட மனிதனுக்கு மனைவியானாள்.(ரூத் 4:7-9)

போவாஸ் என்ற பெயருக்கு "விரைவு, அவரில் பலம்" என்று பொருள். இது நம் ஆண்டவருக்கு பொருத்தமான விளக்கமாகும். ஒரு புறஜாதிப் பெண்ணான ரூத்தை விலைக்கு வாங்கியது, புறஜாதியினரை கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கத்தினராக இருப்பதற்கு அழைக்கப்படுவதைக் குறிக்கிறது. (கலாத்தியர்3:28-29)

போவாஸிடம் ரூத்தின் புதிய பக்தியை, அர்ப்பணிப்புடன் ஒப்பிடலாம். "கர்த்தருக்கென்று முழு அர்ப்பணிப்பு என்ற பாதரட்சையை அணிந்துகொண்டு, மரணம் வரை கரடுமுரடான பாதையில் நடப்பதற்கு ஆயத்தமாகுங்கள்" என்று அறிவுறுத்துகிறார். (Reprint 2453:4)அப்போஸ்தலன் பவுல் சகோதரர்களுக்கு அறிவுரை கூறியபோது, "சமாதானத்தின் சுவிசேஷம் என்னும் ஆயத்தம் என்னும் பாதசட்சைகளை உங்கள் கால்களிலேதொடுத்து கொள்ளுங்கள் " என்று ஊக்குவித்தார். "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்" (எபேசியர் 6:15)அத்தகைய விலைமதிப்பற்ற உறவின் இலட்சியவாதத்தை சங்கீதக்காரன் பகிர்ந்து கொள்கிறார்.

"குமாரத்தியே கேள், நீ உன் செவியைச் சாய்த்துச் சிந்தித்துக்கொள், உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது இராஜா உன் அழகில் பிரியப்படுவார், அவர் உன் ஆண்டவர் ஆகையால் அவரைப் பணிந்துகொள்."(சங்கீதம் 45:10-11).கர்த்தருடன் ஆழமான உறவைத் தேடும் போது, அவர் தனது பிரசன்னத்தை விரும்புகிறார் என்பதை அறிந்து, திருச்சபை தனது உலகப்பிரகாரமான தந்தையின் வீட்டை மறந்துவிடுகிறது. "இயல்பிலேயே புறஜாதியாராக இருந்த நாம் (ரூத் ஒரு மோவாபியப் பெண் போல) கடவுளின் கிருபையால் ஆவிக்குரிய இஸ்ரயேலராகிவிட்டோம், இனிமேல் முந்தைய நிலைமைகள், ஆர்வங்கள்,இன்பங்கள் மற்றும் உறவுகள் என்றென்றும் போய்விட்டன என்பதை தீர்மானிக்க வேண்டும். நமக்கு "பழையவைகள் ஒழிந்து போயின, இதோ எல்லாம் புதிதாயின" (Reprint 4089)

காலப்போக்கில், ரூத் ஓபேத் என்ற மகனைப் பெற்றெடுத்தாள்.நகோமியிடம் ரூத் சொன்ன அன்பான வார்த்தைகள், வயதான பெண்ணின் மனதுக்கு புத்துயிர் அளித்து, வாழ்க்கையில் அவளுடைய நோக்கத்தைப் புதுப்பித்தது. "அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து - சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவன் பேர் இஸ்ரயேலிலே பிரபலமாகக்கடவது. அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர் வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன். உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள்."(ரூத் 4:14-16) ஓபேத், ஈசாயின் தந்தையானார், அவர் தாவீதைப் பெற்றெடுத்தார். பின்னர் ரூத் இயேசுவின் அரிய புறஜாதி மூதாதையரானார்.

## ஆபிரகாமின் உடன்படிக்கையில் - நகோமி மற்றும் சாராளின் அம்சம்

நகோமியின் முந்தைய கதையில், அவள் குழந்தையில்லாத விதவையாக சித்தரிக்கப்பட்டாள், அவள் தன்னை "மாரா" என்று அழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டாள், அதற்கு கசப்பு என்று பொருள். அதேபோல், ஆபிரகாமின் மனைவி சாராள், கடவுள் வாக்களித்த மகனைப் பற்றிய வாக்குறுதியைப் பெற்ற பிறகும், பல ஆண்டுகளாக மலடியாகவும் கசப்பான அனுபவங்களை அனுபவித்து கொண்டிருந்தாள். அவர்களுடைய சந்ததி "பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்கும்" என்ற வாக்குறுதி, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக பலனளிக்காமல் இருந்தது. நகோமி மற்றும் சாராளின் சோகத்திற்கு இடையிலான ஒற்றுமை வியக்கத்தக்கது. சாராவைப் போலவே, நகோமியும் மறக்கப்பட வில்லை. உள்ளூர் பெண்கள் நகோமிக்கு ஒரு இனிமையான ஆசீர்வாதத்தை அளித்தனர். "அப்பொழுது ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து - சுதந்தரவாளி அற்றுப்போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவன் பேர் இஸ்ரயேலிலே பிரபலமாகக்கடவது. அவன் உன் ஆத்துமாவுக்கு ஆறுதல் செய்கிறவனும், உன் முதிர் வயதிலே உன்னை ஆதரிக்கிறவனுமாயிருக்கக்கடவன். உன்னைச் சிநேகித்து, ஏழு குமாரரைப்பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள் அவனைப் பெற்றாளே என்றார்கள். நகோமி அந்தப் பிள்ளையை எடுத்து, தன் மடியிலே வைத்து, அதை வளர்க்கிற தாயானாள்."(ரூத் 4:14-16)

நகோமி அவனைப் பராமரிக்கும்போது, அவன் ஒரு பெரிய ஆசீர்வாதமாகவும், அவளுடைய வாழ்க்கையில் புதிய அர்த்தத்தைக் கொண்டுவருபவனாகவும் இருப்பான்.

ஓபேத் என்ற பெயருக்கு "வணங்குபவர்" என்று பொருள். நகோமியைப் போலவே, ஆபிரகாமின் உடன்படிக்கையில் சாராள் அம்சமும் ஒரு நாள் குழந்தைகளைப் பெற்றெடுக்கும், அவர்கள் கடவுளை இதயத்திலிருந்து வணங்குவார்கள். ஒரு காலத்தில் கசப்பும் குழந்தை இல்லாதவர்களுமாக இருந்த நகோமியும் சாராளும் மகிழ்ச்சியடைவார்கள். சாராளுடைய விவரிப்பு நிறைவேறும் போது, ஏசாயாவின் தீர்க்கதரிசன வார்த்தைகள் நம்பிக்கையால் நிரப்பப்படுகின்றன."பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு, கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு, வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாதை ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு, உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும், தடைசெய்யாதே, உன் கயிறுகளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலது புறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய், உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை, நாணாதே, நீ இலச்சையடைவதில்லை, உன் வாலிபத்தின் வெட்கத்தை நீ மறந்து, உன் விதவையிருப்பின் நிந்தையை இனி நினையாதிருப்பாய். "(ஏசாயா54:1-4)

ஆபிரகாமின் வாக்குறுதி நிறைவேறும் போது, உலகம் மீண்டும் ஆரோக்கியமாகி, அதன் முழு திறனை அடைய உதவும்.

## நகோமியிடம் இருந்து பாடங்கள்

நகோமியின் அனுபவம் சில அர்த்தமுள்ள பாடங்களைக் கொண்டுள்ளது. அவளுடைய விசுவாசம் மோவாபில் இருந்தவர்கள் மீது, குறிப்பாக அவளுடைய இரண்டு மருமகள்கள் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. நகோமியிடம் ரூத்தின் அர்ப்பணிப்பு, நகோமியிடமிருந்து அவள் கற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஒரு விசுவாசத்தைக் காட்டியது. ரூத் நகோமியுடன் இஸ்ரயேலுக்குத் திரும்புவதாக உறுதியளித்தபோது, "உங்களுடைய தேவன் என் தேவன் " என்று அவள் சொன்னாள். (ரூத் 1:16 )நகோமியைப் பின்பற்றி ஒரே உண்மையான கடவுளை வணங்குவதற்காக அவள் தன் தாய்நாட்டையும் மோவாபிய தெய்வங்களையும் விட்டு வெளியேற வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தாள். நகோமியின் விசுவாச வாழ்க்கை ரூத்தில் ஒரு வலுவான நம்பிக்கையை வளர்த்தது.

நகோமியின் விசுவாசம் பிரமிக்க வைக்கிறது, ஏனென்றால் அவளுடைய வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இல்லை. அவள் விதவையாகி இரண்டு மகன்களையும் இழந்திருந்தாள்.

அவளுடைய மென்மையான மனசாட்சி, அவளுடைய கஷ்டங்களுக்கு அவள்தான் காரணம் என்று நம்ப வைத்தது. ஆனாலும் அவள் இன்னும் கர்த்தரை நேசித்து மகிமைப்படுத்தினாள். "உங்கள் கடவுள் என் கடவுளாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று அவளுடைய மருமகள் சொல்வது எவ்வளவு அற்புதமான ஒரு காரியமாக உள்ளது. இயேசு சொன்னபோது விவரிக்கப்பட்ட முன்மாதிரியின் படி நகோமி வாழ்ந்தாள்.



"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத்தேயு5:16)

நகோமியின் அனுபவத்திலிருந்து மற்றொரு பாடம், வாழ்க்கையின் கடினமான அனுபவங்களினாலோ அல்லது நமது இயற்கையான தோல்விகளாலோ தோற்கடிக்கப்பட்டதாக உணரக்கூடாது என்பதாகும்.இவை நம்மை கசக்க அனுமதிக்கக்கூடாது, மாறாக கர்த்தரிடமும் அவருடைய ஜனங்களிடமும் நெருங்கி வருவதற்கான வாய்ப்புகளாக இவைகளை பயன்படுத்திகொள்ள வேண்டும். நம் மனதைக் கர்த்தர் மீதும், நாம் பகிர்ந்து கொள்ளும் பல நன்மைகளின் மீதும் ஒருமுகப்படுத்த உதவுவதால், இதே போன்ற விலைமதிப்பற்ற விசுவாசிகளிடம் தோழமையைக் கண்டறிவது முக்கியம்.

நகோமி தன் மருமகள்கள் மீது ஆழ்ந்த கவனிப்பையும், அக்கறையையும் காட்டினாள். பெத்லகேமுக்குத் திரும்புவதைப் பற்றி யோசித்துப் பார்த்து போது, ரூத்தும் ஓர்பாளும் என்ன தியாகம் செய்வார்கள் என்பதைப் பற்றி யோசித்தாள், விதவைகளாகவும் அந்நியர்களாகவும் இருப்பதால் அவர்கள் கடினமான அனுபவங்களைச் சந்திப்பார்கள் என்று யூகித்தாள். அவர்களுக்கு அதிக துன்பத்தை ஏற்படுத்துவதை விட அவள் தனியாக இஸ்ரயேலுக்கு திரும்பத் தயாராக இருந்தாள். இந்த தன்னலமற்ற செயல், மற்றவர்களின் நலன்களை ஒருவரின் சொந்த நலன்களுக்கு மேலாக வைப்பதற்கான ஒரு சக்திவாய்ந்த எடுத்துக்காட்டு. மற்றவர்களுக்கு உதவுவதற்கும் ஆசீர்வதிப்பதற்கும் வழிகளைக் கண்டுபிடிப்பது தெய்வீகமானது.

இவ்வளவு பெரிய இழப்பை அனுபவித்த பிறகு, நகோமி தனது தாய்நாட்டிற்குத் திரும்பிச் செல்ல முடிவு செய்தது, இது அவளுடைய மனத்தாழ்மையின் இருதயத்தை வெளிப்படுத்துகிறது. வழிதவறிச் சென்ற பிறகு தம்மிடம் திரும்புபவர்களை கடவுள் எப்போதும் ஏற்றுக்கொள்வார் என்பதை இந்த உதாரணம் நமக்கு உறுதியளிக்கிறது.

**சுருக்கம்**

இந்தச் சிறிய ஆனால் அர்த்தமுள்ள கதை, இஸ்ரயேலின் நிராகரிப்பிலிருந்து ஆபிரகாமிய வாக்குறுதியின் மூலம் உலக மீட்பு மற்றும் ஆசீர்வாதம் வரை கடவுளின் திட்டத்தை அழகாக விளக்குகிறது. இதில் அர்த்தமுள்ள குணநலப் பாடங்களும் உள்ளன.எலிமெலேக்கு கர்த்தரை நம்புவதற்குப் பதிலாக தன் தேசத்தையும் மக்களையும் விட்டு விட்டான், இஸ்ரயேலரும் அதையேதான் செய்தார்கள். இருப்பினும், வாழ்க்கையின் அனுபவங்களுடன் போராடுவது என்பது அதன் பல சவால்களினால் கர்த்தருடைய வழிகாட்டுதலைத் தேடுவதற்கான ஒரு நேரம் என்பதை நகோமியின் உதாரணம் கற்பிக்கிறது. .

அன்பு மற்றும் பக்தியின் அழகான செயலினால், ரூத் நகோமியையும் அவளுடைய கடவுளையும் பின்பற்ற முடிவெடுத்தாள். ரூத்தின் உன்னதமான இருதயம் அவளுக்கு மிகுந்த ஆசீர்வாதங்களைக் கொண்டு வந்தது. பின்னர் ஒரு நல்ல மனிதனாகிய போவாஸின் உறவைத் தேடி அவரை மணந்ததினால் அவளுக்கு இன்னும் பெரிய நன்மைகளைக் கொண்டு வந்தது.உச்சப்பட்சமான ஆசீர்வாதங்களை அடைந்தாள்.

நாம் கர்த்தரைத் தேடும்போது, நமக்குப் பெரும் நன்மைகளும் கிடைக்கின்றன. அவர் நமது நலனை மனதில் கொண்ட ஒரு அற்புதமான ஆவிக்குரிய நலன்களை வழங்குகின்றார். ரூத்துக்கு வாக்குறுதியளிக்கப்பட்டதைப் போலவே, அர்ப்பணிக்கப்பட்டவர்களின் பணிக்கும் விசுவாசத்திற்கும் கர்த்தர் வெகுமதி அளிக்கிறார். (ரூத் 2:12) ஆபிரகாமின் வாக்குறுதி இறுதியாக நிறைவேறும் போது, "பூமியின் எல்லைகளெல்லாம் நினைவுகூர்ந்து கர்த்தரிடத்தில் திரும்பும், ஜாதிகளுடைய சந்ததிகளெல்லாம் உமது சமுகத்தில் தொழுது கொள்ளும். (சங்கீதம்22:27)

## நம்முடைய அஸ்திபாரம்

# கட்டுபவர்களால் நிராகரிக்கப்பட்ட கல்



"வீடுக்கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று." (சங்கீதம் 118:22)

— Brett Blackwell

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள், இயேசு கிறிஸ்துவின் மீதான நமது விசுவாசத்திற்கும் நம்பிக்கைக்கும் ஒரு அடிப்படையை வழங்குகின்றன. லூக்கா 24:27 நமக்கு விளக்குவது போல், இதை இயேசுவை விட வேறு யாரும் நன்கு அறிந்திருக்கவில்லை. "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங் களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லி யவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். "இயேசு கிறிஸ்துவின் அத்தகைய ஒரு தீர்க்கதரிசனம், KJV மற்றும்RVIC இல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடி, மூலைக்கல் அல்லது "மூலையின் தலையைப்" பற்றியது.

பழைய ஏற்பாட்டு மூலைக்கல் தீர்க்கதரிசனங்களின் அழகிய அர்த்தத்தை இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருப்பது, கிறிஸ்தவர்களின் விசுவாசத்தைப் பலப்படுத்துவதாகக் காண்கிறது. அவை கடவுளின் திட்டங்களைப் பற்றி,குறிப்பாக கிறிஸ்து, தலை மற்றும் சரீரத்தை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதற்கான சிறந்த நுண்ணறிவை வழங்கியுள்ளது.

ஏசாயா 28 மற்றும் சங்கீதம் 118 இரண்டிலும் மூலைக்கல் தீர்க்கதரிசனம் காணப்படுகிறது. மூலைக்கல் தீர்க்கதரிசனத்தின் கொள்கைகள் ஏசாயா 7-9 அதிகாரங்கள் மற்றும் சகரியா 4 இல் உள்ள தொடர்புடைய தீர்க்கதரிசனங்களால் மேம்படுத்தப்பட்டுள்ளன.



அப்போஸ்தலன் பேதுரு இந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களை,ஜீவனுள்ள கற்களால் ஆன ஒரு ஆலயத்தின் படத்தில் சுருக்கமாகக் கூறுகிறார், இது கடவுளின் திட்டத்தில் திருச்சபையின் பங்கின் ஒரு அழகான விளக்கமாகும். இந்தத் தீர்க்கதரிசனங்களைப் பற்றி அப்போஸ்தலன் பவுல் பல நேரடி மற்றும் மறைமுக குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்.

### ஏசாயா 28 - ஒரு அஸ்திபாரக் கல்

"ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது - இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்."(ஏசாயா 28:16)

"மூலை" என்பதற்கான எபிரெய வார்த்தை (ஸ்ட்ராங்கின் , பின்னா)"கோணம்" (angle)என்று பொருள்படும், மேலும் வேதாகமத்தில் வேறு இடங்களில் ஒரு மூலையின் செங்கோணத்தை(right angle) வரையறுக்கப்பயன்படுத்தப்படுகிறது (கூடாரத்தின் வெண்கல பலிபீடத்தின் நான்கு மூலைகள், யாத்திராகமம் 27:2 போன்றவை)பாரம்பரிய கட்டிட செயல்பாட்டில், குறிப்பாக "கல்லை" கொண்டு கட்டுவதில், பொதுவாக முதலில் ஒரு அடித்தளக் கல் போடப்பட்டு, கட்டிடத்தின் மீதமுள்ள பகுதிகளுக்கான கோணங்களையும் நிலைகளையும் அமைக்கிறது. இதுவே "மூலைக்கல்" ஆகும். ஏசாயாவில் உள்ள இந்தத் தீர்க்கதரிசனம் மூலைக்கல்லை சீயோனுடன் தொடர்புபடுத்துகிறது. மேலும் சகரியா 8:3 வில் "நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன், எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்." என்று கூறுகிறது. மாம்ச இஸ்ரயேலுடன் கடவுளின் வாசஸ்தலத்தின் அடையாள இடமாகவும், எதிர்கால ராஜ்ய அரசாங்கத்தின் இடமாகவும் இருக்கும் எருசலேம், சீயோன் மலையில் கட்டப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் (எரேமியா 8:19) சீயோன் கடவுளின் அடையாள வாசஸ்தலமாகும், மேலும் இது பொதுவான ஆவிக்குரிய இஸ்ரயேலைக்

குறிக்கிறது.

ஏசாயா 28 -ல் உள்ள இந்த மூலைக்கல் பகுதி மாம்ச இஸ்ரயேலருக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கும் தீர்க்கதரிசனமாக இருந்தாலும், மூலைக்கலின் தீர்க்கதரிசன அர்த்தத்தைப் புரிந்துகொள்ள மேலும் ஆய்வு தேவை.புதிய ஏற்பாடு மிகவும் உதவியாக உள்ளது. ஏசாயா28:16 ம் வசனத்தை, ஒரு பகுதியும், அப்போஸ்தலனாகிய பேதுரு 1பேதுரு2:6 வில் முழுமையாகவும் மேற்கோள் காட்டுகிறார்."விசுவாசிக்கிறவன் பதறான்" என்ற ஏசாயாவின் வார்த்தைகளுக்கு அப்போஸ்தலரின் விளக்கம், "வெட்கப்பட்டு போவதில்லை" அல்லது அந்தக் கல்லை நம்புவதற்காக வெட்கப்படமாட்டார் என்று தோன்றுகிறது.சோதிக்கப்பட்ட மூலைக்கல், விசுவாசத்திற்கு ஒரு உறுதியான அடித்தளத்தை வழங்கும், அதின் மேல் விசுவாசம் வைப்பவர்கள் முழு நம்பிக்கையுடன் இருக்க முடியும், வெட்கப்பட மாட்டார்கள்.

## சங்கீதம் 118 - புறக்கணிக்கப்பட்ட கல்

"வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று. அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்."(சங்கீதம் 118:22-24)இயேசு தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில், இந்தத் தீர்க்கதரிசனத்திலிருந்து மேற்கோள் காட்டினார் (மத்தேயு 21, மாற்கு 12, மற்றும் லூக்கா20)எருசலேமுக்குள் சவாரி செய்து ஆலயத்தைச் சுத்திகரித்த பிறகு, இயேசு குருடர்களையும் முடவர்களையும் குணப்படுத்தினார். அவர் ஆலயத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதைக் கண்ட மதத் தலைவர்கள் பொறுமை இழந்தனர். பிரசங்கிக்கவும் குணப்படுத்தவும் அவர் பெற்ற அதிகாரத்தை குறித்து அவர்கள் கேள்வி எழுப்பினர். இயேசு தனது கடைசி உவமைகளில் ஒன்றான குத்தகைதாரர்கள் (அல்லது பொல்லாத தோட்டக்காரர்)உவமையுடன் பதிலளித்தார்(மத்தேயு 21:33-40)

உவமையில், நில உரிமையாளரின் வேலைக்காரர்களும், பின்னர் அவரது மகனும், பொல்லாத குத்தகைதாரர்களால் கொல்லப்பட்டனர். நில உரிமையாளர் அந்த குத்தகைதாரர்களை என்ன செய்ய வேண்டும் என்று இயேசு மதத் தலைவர்களிடம் கேட்டார்.

நில உரிமையாளர் அந்தப் பொல்லாத மனிதர்களை அழித்து விட்டு, "காலங்களில் உள்ள விளைச்சலை" அளிக்கும் மற்ற குத்தகைதாரர்களுக்கு திராட்சைத் தோட்டத்தைக் குத்தகைக்கு விட வேண்டும் என்று அவர்கள் பதிலளித்தனர்.இயேசு தம்முடைய ஊழியத்தின் இந்தக் கட்டத்தில், சங்கீதம் 118:22, 23ஐ மேற்கோள் காட்டி உவமையை விளக்குவது பொருத்தமானது என்று கண்டார். எனவே அவர், "... வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா ? ஆகையால், தேவனுடைய இராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்"(மத்தேயு21:42-43)என்றார்.

கடவுளுடைய இராஜ்யத்தின் பிரசங்கியாராக, இயேசுவே அந்த"கல்லாக" இருந்தார்.

அன்றைய மத ஆட்சியாளர்களாக இருந்த "கட்டுபவர்களால்" அவர் நிராகரிக்கப்பட்டார், அதே மனிதர்கள் தான் அவர் குணப்படுத்தும் அதிகாரத்தையும், அவர் இராஜ்யத்தைப் பற்றி பிரசங்கிக்கக்கூடிய அதிகாரத்தைக் குறித்து கேள்வி எழுப்பினர். இயேசு தங்களைப் பற்றிப் பேசுகிறார் என்பதை மதத் தலைவர்கள் அறிந்திருந்தார்கள் என்பது பதிவுகளிலிருந்து தெளிவாகிறது.(மத்தேயு21:45)

இந்தக் கட்டிடக் கலைஞர்கள், திராட்சைத் தோட்டத்தால் சித்தரிக்கப்படும் கடவுளுடைய இராஜ்யத்தின் பராமரிப்பாளர்களாக இருந்தனர். பின்னர், அந்தத் தோட்டம் புதிய பராமரிப்பாளர்களுக்கு, அதாவது "அதன் கனிகளைத் தரும் ஒரு தேசத்திற்கு" கொடுக்கப்படும்."இஸ்ரயேலின் மத தலைவர்கள், நில உரிமையாளரின் மகனின் உவமையில் சித்தரிக்கப்பட்டுள்ள கடவுளின் குமாரனாகிய இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. வசனங்களில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை என்றாலும், ஊழியர்கள் தீர்க்கதரிசிகளாக இருக்கவேண்டும். (லூக்கா 11:47-48), நில உரிமையாளர் யெகோவா தேவனே.

## நன்றி செலுத்துதல் பரிசுத்தமான விஷயங்களுடன் தொடர்புடையது

"கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது"(சங்கீதம் 118:1)

சங்கீதம் 118 இன் முதல் வசனம் நன்றி செலுத்தும் சங்கீதங்களுக்கு (சங்கீதங்கள் 106, 107 மற்றும் 136) ஒரு பொதுவான தொடக்கமாகும். இந்த

சங்கீதம் அதே வார்த்தைகளுடன் முடிகிறது. (வசனம் 29)இந்த சொற்றொடர் தாவீது உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வந்து ஒரு கூடாரத்தில் வைத்தபோது செய்த நன்றி செலுத்தும்

ஜெபத்திலும் காணப்படுகிறது (1நாளாகமம் *16:34*)புதிதாகக் கட்டப்பட்ட ஆலயத்திற்குள் பெட்டி வைக்கப்பட்ட போதும், பின்னர் ஆலய பிரதிஷ்டையின்போதும் (2நாளாகமம் 5 மற்றும் 7) இதே போன்ற வார்த்தைகளால் சாலொமோன் இராஜா யெகோவா தேவனைக் கௌரவித்தார்.

பாபிலோன் சிறையிருப்புக்குப் பிறகு ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பும் போது, முதல் கல்லை வைத்தபோது இஸ்ரயேலர் இதே வார்த்தைகளைப் பாடினார். (எஸ்றா *3:10, 11*)

ஆழ்ந்த நன்றியுணர்வை வெளிப்படுத்துவது, கடவுளின் பரிசுத்த ஆலயத்துடன் சரியாக தொடர்புடையது என்பதும், அதிலிருந்து வரும் பல ஆசீர்வாதங்களை அங்கீகரிப்பதும் தெளிவாகிறது. நமது விசுவாசத்தின் முக்கிய மூலக்கல்லைக் கருத்தில் கொள்ளும் போதெல்லாம் அத்தகைய நன்றியுணர்வு பெருக்கெடுக்க வேண்டும்.

சங்கீதம் 118 -ல் உள்ள பல வசனங்கள் மேசியாவைப் பற்றி நுட்பமான குறிப்புகளைக் கொண்டுள்ளது. வசனங்கள் 15 மற்றும் 16 கர்த்தருடைய வலது கரத்தை வீரம் மற்றும் மேன்மையுடன் தொடர்புப்படுத்துகின்றன. வேதம் முழுவதும், யெகோவா தேவனின் வலது கரம் அவருடைய விருப்பத்திற்கும் அவருடைய மகத்தான வல்லமைக்கும் அடையாளமாக உள்ளது, அது அவரைத் தேடுபவர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் இரட்சிப்பின் இடமாகவும் இருக்கிறது. (யாத்திராகமம் *15:6*, சங்கீதம் *17:7, 20:6* )

சங்கீதம் 110:1ல் உள்ள தாவீதின் வார்த்தைகள், இயேசு பரலோகத்திற்கு உயர்த்தப்பட்ட பிறகு, யெகோவா தேவனின் வலது கரம் என்று தீர்க்கதரிசனமாக விவரிக்கின்றன. பேதுரு தனது பெந்தெகொஸ்தே பிரசங்கத்தில் தாவீதின் வார்த்தைகளை கர்த்தருக்குப் பயன்படுத்தினார். (அப்போஸ்தலர் *2:33-36*)

## ஏசாயா 7-9 இடறுதலின் கன்மலை

அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார், ஆகிலும் இஸ்ரயேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். (ஏசாயா 8:14) இந்த வசனப்



பகுதியின் அமைப்பு, இஸ்ரயேல் மற்றும் யூதாவை அசீரியர்கள் தொடர்ந்து துன்புறுத்திய காலத்தின் போது நடந்தது.

தீர்க்கதரிசிகள் பிரசங்கித்த கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் கவனிக்கத் தவறியதன் நேரடி விளைவாக அசீரியப் படையெடுப்பு இருந்தது.

மத்தேயு மற்றும் லூக்காவின் குத்தகைதாரர்களின் உவமையில், இயேசு பிரதான மூலைக்கல்லை ஏசாயா விவரித்த இடறலின் கல் மற்றும் தடுக்கலின் கன்மலையோடு தொடர்புப்படுத்தினார். "இந்தக் கல்லின் மேல் விழுகிற எவனும் நொறுங்கிப் போவான்" என்று அவர் கூறினார் (மத்தேயு *21:44*) இயேசு யார் என்பதை இஸ்ரயேல் அங்கீகரிக்கத் தவறிவிட்டது, இதன் விளைவாக ஒரு தேசமாக இருந்த இஸ்ரயேல் உடைந்தது. "இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான், இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்."

ஏசாயா *8:14* ல் கொடுக்கப்பட்டுள்ள தீர்க்கதரிசனத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு குறிப்பை, முந்தைய அதிகாரத்தில் யூதாவின் இராஜாவான ஆகாஸுக்கு கடவுள் அளித்த அடையாளத்தில் காணலாம். "ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுயேல் என்று பெரிடுவாள்." 8 ஆம் அதிகாரத்தின் முந்தைய வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்த வேதத்தின் பகுதியளவு நிறைவேற்றம் இருந்த



போதிலும், இந்தத் தீர்க்கதரிசனத்தின் தொடர்ச்சியும் ஏசாயா 9:6, 7இல் உள்ள மேசியாவின் அழகிய சித்தரிப்பும் ஏசாயா8:14 இன் வார்த்தைகளை இதேபோன்ற பார்வையுடன் சிந்திக்க வைக்கிறது. உண்மையில் இடறலின் கல்லும், தடுக்கலின் கன்மலையும் உண்மையில், இயேசு கிறிஸ்துவுக்கு தீர்க்கதரிசன அர்த்தத்தில் பொருந்தும். இயேசு அவருடைய நாளின் மதத் தலைவர்களுக்கு ஒரு தடுக்கலின் கன்மலையாக இருந்தார். அவர்கள் அவரை கடவுளின் குமாரனாகவோ அல்லது நீண்ட காலத்திற்கு முன்பு வாக்குறுதியளிக்கப்பட்ட மேசியாவாகவோ அங்கீகரிக்கவில்லை. அவர்கள் அவரை நிராகரித்து, சிலுவையில் அவரது மரணத்தை உறுதி செய்தனர். அவர் இஸ்ரயேலின் இரு வீட்டாருக்கும் ஒரு தடைக்கல்லாக இருந்தார்.

இஸ்ரயேல் வம்சத்தார் இயேசுவின் நாமத்தில் தடுமாறி, ஆபிரகாமிய வாக்குறுதியின் முக்கிய ஆசீர்வாதங்களைப் பெறும் வாய்ப்பை இழந்தனர் (ரோமர் 9:22, 23 )இஸ்ரயேலின் மற்றொரு தீர்க்கதரிசன வீடான ஆவிக்குரிய வீடான (1பேதுரு 2:5), பல பெயரளவிலான கிறிஸ்தவர்களும் இயேசுவின் மீது தடுமாறி, மீட்கும் பலியின் அடிப்படையான மற்றும் அத்தியாவசியமான கோட்பாட்டை தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். (1பேதுரு1:18-21)

சங்கீதம் 118:22 ஐயும், மத்தேயு21:42ல் நம் ஆண்டவர் அதைக் குறிப்பிட்டதையும் திரும்பிப் பார்க்கும்போது, அந்தக் கல் "மூலைக்குத் தலைக் கல்" என்று அழைக்கப்படுவதைக் காண்கிறோம். "தலை" என்பதற்கான எபிரெய வார்த்தை (ஸ்ட்ராங்கின், H7218ரோஷ்)சிங் ஜேம்ஸ் பதிப்பில் துல்லியமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது மற்றும் மிக முக்கியமான கல் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. மற்ற மொழிபெயர்ப்புகள் "தலைமை" என்ற வார்த்தையை சரியாகப் பயன்படுத்துகின்றன. "மூலையின் தலை" என்ற சொற்றொடர் NKJV மற்றும்NASB போன்ற பிற மொழிபெயர்ப்புகளில் "தலைமை மூலைக்கல்" என்று பொருத்தமாக குறிப்பிடப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கட்டிடத்தின் முதல் கல், பிரதான மூலைக்கல், கட்டுபவர்கள் நிராகரித்த ஒன்றாகும்.

## 1 பேதுரு 2 - ஜீவனுள்ள ஒரு கல்

"மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே - இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன், அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. (1பேதுரு 2:4-6) பழைய ஏற்பாட்டில் மூலைக்கல்லுடன் தொடர்புடைய தீர்க்கதரிசனங்கள் நேரடியாக இயேசுவுடன் தொடர்புடையவை என்பதை அப்போஸ்தலன் பேதுரு உறுதிப்படுத்துகிறார். ஒரு கல் ஏன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மற்றும் சபையின் பொருத்தமான உருவகமாக இருக்கிறது என்பதை அவரது வார்த்தைகள் விளக்குகின்றன. அப்போஸ்தலன் இயேசுவை ஒரு ஜீவனுள்ள கல்லாக இருந்தாலும் அவர் "மனுஷரால் புறக்கணிக்கப்பட்டார்" என்று விவரிக்கிறார். அந்தக் கல் கட்டுபவர்களால் மட்டுமல்ல, இஸ்ரயேல் தேசத்தாலும் நிராகரிக்கப்பட்டது. ஏசாயாவும் இதே கருத்தைத்தான் கூறுகிறார். "அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார், அவரை விட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற்போனோம்." (ஏசாயா53:3) ஆனால் அதே

வசனத்தில் பேதுரு, ஜீவனுள்ள கல்லின் பரலோகக் கண்ணோட்டத்தை "கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டதும் விலையேறப் பெற்றதும்" என்று விவரிக்கிறார். இயேசு "பரீட்சிக்கப்பட்ட கல், விலையுயர்ந்த மூலை கல்" என்ற ஏசாயாவின் விளக்கத்தால் இது மீண்டும் எதிரொலிக்கிறது. "அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசக்கிறவன் பதறான்." (ஏசாயா28:16 )

பின்னர் பேதுரு, "கட்டுபவர்கள்" கட்ட வேண்டியதைப் பற்றிய சித்திரத்தை நிறைவு செய்தார். அவர் நமது கர்த்தராகிய இயேசுவை திருச்சபை உறுப்பினர்களுக்கு மூலைக்கல் என்று விவரிக்கிறார். "ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகைகளாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். "(1பேதுரு2:5 ) என்று அவர் கூறுகிறார்.

இஸ்ரயேலின் மதத் தலைவர்களான கட்டிடக் கலைஞர்கள், தாங்கள் வருகை தரும் நேரத்தை அறியாதவர்கள் (லூக்கா*19:44*) தேவனுடைய குமாரனை அடையாளம் கண்டு அவர் மீது தங்கள் விசுவாசத்தைக் கட்டியிருக்க வேண்டும்.

ஒரு கட்டிடத்தின் உருவகத்தோடு அப்போஸ்தலன் பவுல் சிலவற்றை கூட்டினார்

"ஆகையால்,நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள், அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். "(எபேசியர் 2:19, 20) வரையப்படும் படம் ஆவிக்குரிய ஆலயத்தின் ஒரு சித்திரம் - "தேவனுடைய வீடு" -பற்றியது, மேலும் இயேசுவே அதற்கு மூலைக்கல். இவர்கள் தீர்க்கதரிசிகள் மற்றும் அப்போஸ்தலர்கள் மீது கட்டப்பட்ட விசுவாசத்தின் அடித்தளத்துடன் கூடிய மாதிரியாவார்.

ஏசாயா 28, சங்கீதம் 118 மற்றும் ஏசாயா 8 இல் நாம் கருத்தில் கொண்டகிறிஸ்துவின் பழைய ஏற்பாட்டு படங்களிலிருந்து நேரடியாக மேற்கோள் காட்டி, 1 பேதுரு2:6-8வசனங்களில் முழு படத்தையும் ஒன்றாக இணைக்கிறார். இவைகள் வசனத்தில் காணப்படுகிறது -"ஆதலால் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது - இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன், அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட




அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்."(ஏசாயா 28:16)

இந்த விலைமதிப்புள்ள, விசுவாசிக்கிற உங்களுக்காகத்தான். ஆனால் நம்பாதவர்களுக்கு, "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று." (சங்கீதம் 118:22).ஏனென்றால் அவர்கள் வார்த்தைக்குக் கீழ்ப்படியாததால் இடறினார்கள், மேலும் இந்த அழிவுக்கும் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். (ஏசாயா 8:14,1பேதுரு2:6-8)

இஸ்ரயேலுக்குக் கொடுக்கப்பட்ட முக்கிய பழைய ஏற்பாட்டு வாக்குறுதிகள், ஜீவனுள்ள கற்களாலான இந்த ஆவிக்குரிய வீட்டிற்கு எவ்வாறு பொருந்தும் என்பதை பேதுரு காட்டுகிறார். (1பேதுரு2:5)உண்மையான மேசியாவை சுட்டிக்காட்டும் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளிலும் கற்பிக்கப்பட்ட அனைத்து பாடங்களையும் அங்கீகரிக்க (ஏற்றுகொள்ள) இஸ்ரயேலர்களுக்கு முதல் வாய்ப்பு கிடைத்தது. யாத்திராகமம் ***19:5*** மற்றும் உபாகமம் 7:6ஐ ஓரளவு மேற்கோள் காட்டி, அப்போஸ்தலன் இப்படியாக கூறுகிறார்-"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும் இராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும் பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்."(1பேதுரு2:9)இந்த வாக்குறுதிகளில் நாம் சேர்க்கப்பட்டதற்கு - தேவனுடைய ஆலயத்தில் பங்கேற்கவும், கற்களாக சேர்க்கப்படவும் - நாம் எவ்வளவு பாக்கியவான்கள். சாலொமோனால் கட்டப்பட்ட ஆலயத்தில் (கர்த்தருடைய வீடாக)கற்கள் சத்தம் இல்லாமல் ஒன்றாகச்சேர்க்கப்பட்டது.

ஒவ்வொரு கல்லும் குவாரியில் வெட்டப்பட்டு பணித் தீர்க்கப்பட்டது. (1இராஜாக்கள் 6:7) அதேபோல், ஆவிக்குரிய ஆலயம் முழுமையடையும் போது, ஒவ்வொரு கல்லும் மாம்சத்தில் இருக்கும் போது, செதுக்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, மெருகூட்டப்பட்டிருக்கும். பின்னர் அவை ஆவிக்குரிய ஆலயத்தில் தனித்தனி கற்களாக முழுமையாகக் கட்டமைக்கப்பட்டு ஒன்றுகூட்டப்படும். ஒவ்வொரு கல்லும் பின்பற்ற வேண்டிய அர்ப்பணிப்பு மற்றும் பலியின் மாதிரியை இயேசு தம் வாழ்நாள் முழுவதும், தம் மரணம் வரை, வழங்கினார்.

**சகரியா 4 - மூலைக்கு தலைக்கல்**

சகரியாவின் நான்காவது அதிகாரம்,பொன் குத்து விளக்குத்தண்டைப் பற்றிய தீர்க்கதரிசியின் தரிசனத்தைப் பதிவு செய்கிறது. இருப்பினும், இந்தத் தீர்க்கதரிசனத்தின் பல அம்சங்கள் நமது விஷயத்துடன் தொடர்புடையவை. முதல் 7 வசனத்தில் காணப்படுகிறது, அங்கு ஒரு தேவதூதன், "செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய், தலைக்கல்லை அவன்



கொண்டுவருவான், அதற்குக் கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் என்றார்!""தலைக்கு மூலைகல்" என்பது ஒரு கட்டிடத்தின் இறுதிக் கல்லாகும், இது அதன் நிறைவைக் குறிக்கிறது. இதன் விளைவாக வரும் "கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக" என்ற ஆர்ப்பரிப்பு இரட்டிப்பான ஆசீர்வாதத்தைக் குறிக்கின்றன மற்றும் இரட்சிப்பின் திட்டத்தின் ஆசிரியரான யெகோவா தேவனை கட்டிடத்தை (வீடு) முடிப்பதற்கு உண்மையான ஆதாரமாகக் குறிப்பிடுகிறது.

இதை அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுகிறார்."ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி," (தீத்து 2:11)

ஒரு பிரமிட்டின் மேல் கல், தலைக்கல் என்றும் அழைக்கப்படுகிறது, இது கட்டிடத்தின் மீது வைக்கப்படும் கடைசி கல்லாகும்.இது முழு கட்டிடத்திற்கும் ஒரு குறிப்பு அல்லது விகிதாசார மாதிரி - பிரமிடு வடிவமைக்கப்பட்ட சரியான வடிவமாகும். மறுபுறம், ஒரு மூலைக்கல் என்பது பொதுவாக ஒரு கட்டிடத்தின் அஸ்திவாரத்திற்காக இடப்படும் முதல் கல்லாகும். எனவே, அடித்தள மூலக்கற்கள் மற்றும் பிரமிட்டின் மீத முள்ள மற்ற பகுதிகளுக்கான சரியான இடம் மற்றும் கோணங்களை தலைக்கல் வழங்குகிறது. மேலே உள்ள கல், உண்மையில், பிரமிட்டின் முக்கிய மூலக்கல்லாகும் -இது முதலில் உருவாக்கப்பட்ட கல் மற்றும் கடைசியாக வைக்கப்படக்கூடிய கல்லாகும். இதுவே அன்று சாதனை மற்றும் பெருமையின் மகுடமாகும்.

தீர்க்கதரிசனத்தின் மற்றொரு குறிப் பிடத்தக்க அம்சம் சகரியா 4:9இல் காணப்படுகிறது. "செருபாபேலின் கைகள் இந்த ஆலயத்துக்கு அஸ்திபாரம் போட்டது, அவன் கைகளே இதை முடித்துத் தீர்க்கும் அதினால் சேனைகளின் கர்த்தர் என்னை உங்களிடத்திற்கு அனுப்பினாரென்று அறிவாய்." ஆலயத்தின் முதல் கல்லை செருபாபேல் நாட்டுவார், அவரே அதை முடிப்பார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எஸ்றா மற்றும் நெகேமியாவின் வார்த்தைகளிலிருந்து, செருபாபேல் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதாவின் ஆளுநராக இருந்தார் என்பதை நாம் அறிவோம். எருசலேமில் ஆலயத்தைக் கட்டுவதற்கு அவரும் அவரது சக தலைவர்களும் முதல் கல்லை நாட்டினர்.

ஆலயத்தைத் திரும்பக் கட்ட யெகோவா தேவன் தான், வழிநடத்தினார் என்பதை இந்தத் தீர்க்கதரிசனம் உறுதிப்படுத்துகிறது. "அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது."(சங்கீதம் 118:23)

இந்தத் தீர்க்கதரிசனத்தை முழுவதுமாகப் படிக்கும் போது, செருபாபேல் இயேசு கிறிஸ்துவின் ஒரு மாதிரி என்பது தெளிவாகிறது. மேலும் அவர் கட்டிய வீடு கடவுளின் ஆவிக்குரிய ஆலயத்தைப் படமாகக் காட்டுகிறது. இந்தக் காரியத்தை பேதுரு மற்றும் பவுலின் உறுதிப்படுத்தும்

வேதவசனங்களுடன் இணைக்கும்போது, இந்த ஆலயத்தின் அஸ்திவாரம் கிறிஸ்துவின் உறுதியான அஸ்திவாரத்தின் மீது கட்டப்பட்ட அப்போஸ்தலர்கள். தனித்தனியான ஜீவனுள்ள கற்கள், சுவிசேஷ யுக அனுபவங்களின் குவாரியில் வெட்டப்பட்டு மெருகூட்டப்பட்டு, கருவிகள் இல்லாமல் அமைதியாகவும் சரியாகவும் பொருந்தும் பரிசுத்தவான்களை சித்தரிக்கின்றன. அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த ஆலயமாக வளர்ந்து, தங்கள் பிரதான மூலைக்கல்லின் மாதிரியின் கீழ் தங்கள் இடத்தைப் பபிடிக்கிறார்கள். (1கொரிந்தியர் 11, 16, 2கொரிந்தியர் 6:16, எபேசியர் 2:19-22)

இஸ்ரயேலின் தலைவர்கள், கட்டிடக் கலைஞர்கள், தங்கள் இதயங்களைத் தயார்படுத்துவதை விட தங்கள் செல்வாக்கு மிக்க நிலைகளைத் தக்கவைத்துக்கொள்வதில் அதிக அக்கறை கொண்டிருந்தனர். (லூக்கா 11:43) நாசரேத்தின் இயேசு கிறிஸ்துவில் பரலோகத் தந்தையின் வெளிப்படையான சாயலை அவர்கள் அங்கீகரிக்கவில்லை. ஆவிக்குரிய ஆலயத்தின் முக்கிய மூலைக்கல்லாக மாறவிருக்கும் கடவுளின் மகனை அவர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர், மேலும் கடவுள் வாக்குறுதியளித்த இரட்சிப்பு வானத்தின் கீழ் வேறு எந்த பெயரிலும் காணப்படவில்லை என்பதைக் காணத் தவறிவிட்டனர். (அப்போஸ்தலர் 4:10-12)

ஆனால் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும், நமது கர்த்தருடைய வார்த்தைகள் மற்றும் அப்போஸ்தலர்களின் அறிவுறுத்தல்கள் மூலமாகவும் இந்த மாதிரியைக் காணக்கூடிய, ஆசீர்வதிக்கப்பட்டவர்களுக்கு, "கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக" என்று கேட்கிறோம் - நமக்கும்கிருபையுண்டாவதாக, உலகத்திற்கும் கிருபையுண்டாவதாக".

ஒருவேளை நாம் ஆவிக்குரிய ஆலயத்தின் வரவிருக்கும் பிரதிஷ்டையில் சங்கீதம் 118 ன் பாடலைக் கேட்போம், "கர்த்தருக்கு நன்றி செலுத்துங்கள், அவர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றும் உள்ளது! அல்லேலூயா!"

மூன்று கலிலேயர்கள்

# யோனா



"கலிலேயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்துபாரும் என்றார்கள். " (யோவான் 7:52)

— Carl Hagensick (Adapted from a 1997 Herald article)

இயேசுவின் காலத்தின் மதத் தலைமைநிலையில் இருந்த வேதபாரகரும் பரிசேயரும் கலிலேயா ஜனங்களை மிகவும் இழிவாகப் பார்த்தனர். பல கலிலேயர்கள் எபிரெயர்கள் அல்ல. யோசுவாவின் நாட்களிலிருந்து, பல கானானியர்கள் அங்கு தொடர்ந்து வசித்து வந்தனர் (நியாயாதிபதிகள் 1:30-33), மேலும் மக்கள் தனித்துவமான உச்சரிப்பில் பேசினார்கள் (மத்தேயு26:69, 73)அந்தப் பகுதி "புறஜாதிகளின் கலிலேயா" என்று பிரபலமாக அறியப்பட்டது (ஏசாயா9:1 , மத்தேயு4:15)

கலிலேயாவிலிருந்து எந்த தீர்க்கதரிசி யாரும் எழுவார்கள் என்று கணிக்கப்படவில்லை என்றாலும், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்ட இரண்டு தீர்க்கதரிசிகள், நாகூம் மற்றும் யோனா, அந்தப் பகுதியினராக காணப்பட்டனர். அவர்கள் கலிலேயாவிலிருந்து வந்தவர்கள் மட்டுமல்ல, அவர்களுடைய நகரங்கள் இயேசுவின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையவை.

நாகூம் கலிலேயா கடலின் வடகிழக்கு மூலையில் இருந்த ஒரு சிறிய மீன்பிடி கிராமமான எல்கோஷ் (நாகூம் 1:1)என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். இருப்பினும், அவரது பிரசங்க ஊழியம் மேற்கே சுமார் ஆறு மைல் தொலைவில் உள்ள பெரிய நகரத்தில் இருந்திருக்கலாம், அந்த நகரம் இன்னும் அவரது பெயரைக் கொண்டுள்ளது - கப்பர்நகூம், அல்லது கஃபர் நௌம் (Kfar Naum)("நாகூம் நகரம்")

யோனா மற்றொரு சிறிய கிராமமான காதேப்பேரைச் சேர்ந்தவர் (2இராஜாக்கள் 14:25)

முதல் வருகையின் போது, இந்த கிராமம் மூன்று மைல் தொலைவில் உள்ள நாசரேத்தால் மாற்றப்பட்டது. இவ்வாறு, இந்த மூன்று கலிலியர்களுக்கும் இடையிலான தொடர்பை நாம் காண்கிறோம். யோனா இயேசுவின் சிறுவயது வீட்டைச் சேர்ந்தவர், நாகூம் கப்பர்நகூமில் பிரசங்கித்தார், அங்கு இயேசுவும் பிரசங்கித்தார்.

யோனாவும் நாகூமும் இரண்டு பொதுவான விஷயங்களைப் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் இருவரும் இஸ்ரயேலின் வடக்கு இராஜ்ஜியத்திற்கு தீர்க்கதரிசிகளாக இருந்தனர், மேலும் அசீரியப் பேரரசின் தலைநகரான நினிவேக்கு தங்கள் செய்திகளை அறிவித்த ஒரே சிறிய தீர்க்கதரிசிகள் ஆவர். நினிவேயின் அழிவைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைத்துக்கொண்டே இஸ்ரயேலில் தங்கியிருப்பதில் நாகூம் திருப்தி அடைந்தார். அதேசமயம், அவருடைய முன்னோடியான யோனா, அழிவுச் செய்தியைப் பிரசங்கிக்க இஸ்ரயேலிலிருந்து அசீரியாவுக்கு அனுப்பப்பட்டார். இது நினிவே பட்டணத்தாரின் மனந்திரும்புதலை உருவாக்குவதில் வெற்றி அடைந்தது. இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் பெயர்களைக் கொண்ட புத்தகங்கள் மற்றொரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டைக் காட்டுகின்றன.நாகூமின் புத்தகம் கடவுளிடமிருந்து வந்த விரிவான செய்தியைக் கொண்டுள்ளது, அதில் இஸ்ரயேலர் தங்கள் எதிரியான நினிவேக்கு பயப்பட வேண்டாம் என்று அறிவுறுத்துகிறது. மறுபுறம், யோனாவின் புத்தகம் இஸ்ரயேலின் அதே எதிரியான நினிவேக்கு அனுப்பப்பட்ட மனந்திரும்புதலின் செய்தியை விவரிக்கிறது.

இந்தக் கட்டுரை யோனாவையும் அவர் பொருத்தமாக முன்னிறுத்திய மற்றொரு கலிலேயரான நாசரேத்தின் இயேசுவையும் மையமாகக் கொண்டிருக்கும்.

### யோனா ஒரு தீர்க்கதரிசி

யோனா ஒரு விருப்பமற்ற ஒரு தீர்க்கதரிசியாகவும், பல வழிகளில் ஒரு புதிராகவும் இருந்தார். .மனந்திரும்புதலின் செய்தியுடன் ஒரு புறஜாதி நகரத்திற்கு குறிப்பாக அனுப்பப்பட்ட ஒரே



எபிரெய தீர்க்கதரிசி அவர்தான். பின்னர் அவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பணியை செய்யாமல் ஓடிவிட்டார். இருப்பினும், அவரது பணி இறுதியில் வெற்றி பெற்றது, இஸ்ரயேலில் எந்த தீர்க்கதரிசிகளும் சாதிக்காத காரியத்தை நினிவேயில் அவர் செய்தார் - மனந்திரும்புதல்.

நினிவேயின் அழிவைப் பற்றிய அவரது மோசமான கணிப்பு நிறைவேறவில்லை.

கலிலேய தீர்க்கதரிசகளான நாகூம் மற்றும் யோனாவின் பெயர்களின் அர்த்தம், அவர்கள் கூறும் அழிவு பற்றிய செய்திகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. நாகூம் என்ற பெயருக்கு "இரக்கமுள்ளவர்" என்று பொருள். யோனா என்ற பெயருக்கு "புறா" என்று பொருள், இது அமைதியின் அடையாளம்.

### யோனாவின் கதை

யோனாவின் பெயரைக் கொண்ட புத்தகத்தின் கதை எளிமையானது. கடவுளின் தீர்க்கதரிசியான யோனா, நினிவேக்கு ஒரு பணிக்காக அனுப்பப்பட்டார். தன்னுடைய வேலையை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, அவர் எதிர் திசையில் யோப்பாவிலிருந்து தூரத்திலுள்ள தர்ஷீஷுக்கு (மேற்கு ஐரோப்பா) சென்று கொண்டிருந்த கப்பலில் தப்பி ஓடினார்.

பின்னர் ஒரு புயல் உருவானது, கப்பலைக் காப்பாற்றுவதற்கான அனைத்து முயற்சிகளும்தோல்வியடைந்ததாகத் தோன்றிய பிறகு, யோனாவை கடலில் வீசுவதற்காக சீட்டு போடப்பட்டது. பின்னர் ஒரு பெரிய மீன் அவரை விழுங்கி, மூன்று நாட்களுக்குப் பிறகு, அவரை வறண்ட நிலத்தில் கக்கியது. தண்டிக்கப்பட்ட யோனா, நினிவேக்குச் சென்று, வரவிருக்கும் அழிவின் செய்தியைப் பிரசங்கித்தார். யோனாவின் சத்தத்தைக் கேட்டதும், நகரவாசிகள் மனந்திரும்பினர், அதனால் அழிவு தவிர்க்கப்பட்டது.

தனது கணிப்புகள் நிறைவேறாததால் விரக்தியடைந்த தீர்க்கதரிசி, மனதில்லாமல் அருகிலுள்ள மலைச் சரிவுக்குச் சென்று மேலும் முன்னேற்றங்களுக்காக காத்திருந்தார். அங்கே, யோனாவை வெயிலிலிருந்து பாதுகாக்க கடவுள் அவருக்கு ஒரு ஆமணக்கு செடியைக் கொடுத்து, இரக்கத்தைப் பற்றிய பாடத்தை யோனாவுக்கு கடவுள் கற்றுக்கொடுத்தார். அவரது புத்தகத்தின் நான்கு அத்தியாயங்களும் நான்கு- செயல் நாடகம் போல விரிவடைகின்றன, ஒவ்வொன்றும் வெவ்வேறு சூழலைக் கோருகின்றன.முதல் அத்தியாயம் யோப்பா துறைமுகத்திலும், பின்னர் மத்தியத்தரைக் கடலில் ஒரு கப்பலிலும்நடைபெறுகிறது. இரண்டாம் அத்தியாயம் முழுவதுமாக ஒரு பெரிய மீனின் வயிற்றில் நிகழ்கிறது. மூன்றாம் அத்தியாயத்தில் காட்சி, அசீரியாவின் தலைநகரான நினிவேக்கு மாறுகிறது. நான்காம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள இறுதிக் காட்சி, அருகிலுள்ள மலையடிவாரத்தில் நிகழ்கிறது.

### யோனாவைப்பற்றிய விளக்கம்

இந்தத் தீர்க்கதரிசனத்தின் விளக்கத்திற்கு இரண்டு குறிப்புகள் உள்ளன. மத்தேயு12:39-41ல் இயேசு முதலாவது குறிப்பைக் கொடுக்கிறார்." அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக - இந்தப் பொல்லாத விபசாரச் சந்ததியார் அடையாளத்தைத் தேடுகிறார்கள், ஆனாலும் யோனா தீர்ககதரிசியின் அடையாளமேயன்றி வேறே



அடையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. யோனா இரவும் பகலும் மூன்றுநாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்தில் இருப்பார். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாத்தீர்ப்பு நாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்."

இந்தப் பகுதி இப்போது யோனாவுக்கும் இயேசுவுக்கும் இடையே நேரடி தொடர்பை வழங்குகிறது. இரண்டாவது குறிப்பு யோனாவின் பெயரான "புறா "என்பதன் அர்த்தத்தில் உள்ளது. புறா தேவனுடைய பரிசுத்த ஆவியின் ஒரு அடையாளமாக உள்ளது. இந்த முக்கியத்துவத்துடன்தான், இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது அது அவர் மீது ஒளிர்ந்ததையும் (மத்தேயு 3:16) நோவாவின் பேழையிலிருந்து பறந்து சென்று, அது பாதுகாப்பாக இறங்க முடியும் என்ற நற்செய்தியைக் கொண்டு வருவதையும் (ஆதியாகமம் 8:8-12) நாம் காண்கிறோம். யோனாவின் புத்தகத்தின் அர்த்ததைப் பற்றிய அர்த்தமுள்ள நுண்ணறிவை புறாவின் அடையாளம் வழங்குகிறது. தீர்க்கதரிசனத்தின் செய்தி பரிசுத்த ஆவியின்

செயலுடன் தொடர்புடையது. இந்த இரண்டு குறிப்புகளும், பல்வேறு நேரங்களில் பரிசுத்த ஆவி செயல்படுபவர்களின் செயலை, யோனாஅடையாளப் படுத்துகிறார் என்பதைக் குறிக்கின்றன.

மாம்ச இஸ்ரயேல் கடவுளிடமிருந்து ஒரு பணியைப் பெற்றது. ஆபிரகாமின் மாம்ச சந்ததியினராக இருக்கும் அவர்கள் "பூமியின் சகல வம்சங்களையும் ஆசீர்வதிக்க" வேண்டியிருந்தது. (ஆதியாகமம் 22:18, யாத்திராகமம் 19:5, 6) அவர்களுடைய தீர்க்கதரிசிகள் பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டனர். (2பேதுரு1:21). ஆனால்,யோனாவைப் போலவே, அவர்கள் தங்கள் பணியை விட்டு ஓடிப்போய், தங்கள் "இடத்தையும்தேசத்தையும்" பாதுகாப்பதில் மட்டுமே தங்கள் முயற்சிகளை மையமாகக் கொண்டிருந்தனர். (யோவான் 11:48-50)

நாடகத்தின் இரண்டாவது செயலில், யோனாவுக்கும் இயேசுவுக்கும் இடையிலான பொருத்தம் மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. வேர்ட்ஸ்வோர்த்தின் (Wordsworth) குறிப்புகளில் இந்த இணைகள் தெளிவாக கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன - யோனா கப்பலின் மரத்திலிருந்து கடலின் ஆழத்திற்குச் சென்றது போல, கிறிஸ்து சிலுவையின் மரத்திலிருந்து பூமியின் ஆழத்திற்குச் சென்றார். மத்தியதரைக் கடலில் புயலால் அலைக்கழிக்கப்பட்டவர்களுக்காக யோனா தன்னையே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தது போல, இந்த உலகக் கடல்களின் புயலால் அலைக்கழிக்கப்பட்டவர்களுக்காக கிறிஸ்து தன்னையே மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். யோனா திமிங்கலத்தின் வயிற்றிலிருந்தும் கடலின் ஆழத்திலிருந்தும் எழுந்தது போல, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார்........ எதிர் மாதிரியின் யதார்த்தம் அந்த நிழலின் வரலாற்று உண்மையை உறுதிப்படுத்துகிறது. யோனா கிறிஸ்துவின் அடையாளம் என்று நிரூபிக்கப்படுகிறார்." (Volume Six, Section II, page 66)

விரிவானஒரு கோணத்தில், யோனா இயேசுவை மட்டுமல்ல, அவரைப் பின்பற்றுபவர்களையும் குறிக்கிறார்.யோனா மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் செலவழித்ததற்கு இணையான ஒரு எடுத்துக்காட்டில், ஏரோது கட்டிய ஆலயம் அழிக்கப்படுவதைப் பற்றியும், அதை அவன் மூன்று நாட்களில் மீண்டும் கட்டுவதாகவும் இயேசு கூறினார். அவர் "தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைப் பற்றிய பேசினார்" என்பதை யோவான் தனது பேச்சைக் கேட்டவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று நமக்குத் தெரிவிக்கிறார். அவரோ"தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்." (யோவான் 2:21)இயேசு கல்லறையிலிருந்து எழுப்பப்பட்டபோது ஒரு புதிய ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றார் என்றாலும், இயேசுவின் வார்த்தைகளில் "கிறிஸ்துவின் சரீரம்", என்பது திருச்சபையுடன் தொடர்புடையது, அதாவது சபையும் ஆவிக்குரிய சரீரங்களைக் கொண்டிருக்கும் என்ற பெரிய அர்த்தத்தை கொண்டுள்ளது. (1கொரிந்தியர் 12:27, எபேசியர் 5:30, கொலோசேயர் 1:24 ) இயேசு மூன்று நாட்களின் ஒரு பகுதியை "பூமியின் வயிற்றில்" கழித்தது போல, அவருடைய திருச்சபை மூவாயிரம் ஆண்டு நாட்களின் ஒரு பகுதியை அதே நிலையில் செலவழிக்கும். (2பேதுரு3:8)

இயேசு மனமுவந்து மனிதர்கள் அவரை மரணக் கடலில் தள்ளிவிட அனுமதித்தது போல, அவரைப் பின்பற்றுபவர்கள் இதை கண்டுபிடித்து தாங்களே மனமுவந்து தங்கள் உயிரை மரணத்திற்கு ஒப்புக் கொடுப்பார்கள். "இந்த வார்த்தை உண்மையுள்ளது, என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்." (2தீமோத்தேயு2:11)

இந்த சிறந்த நாடகத்தின் மூன்றவாது அங்கம் இன்னும் வெளிவரவில்லை. கிறிஸ்துவின் ஆயிரமாண்டு இராஜ்யத்தில் அனைத்து தேசங்களுக்கும் ஒரு செய்தி அறிவிக்கப்படும், அதைத் தொடர்ந்து மனந்திரும்புதல் வரும். ஏசாயா11:9ன் வார்த்தைகளில் இது நமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்."

இறுதிக் காட்சி எப்போதும் பொருந்தக்கூடிய ஒரு கொள்கையை வெளிப்படுத்துகிறது - நம்முடைய கடவுள் இரக்கமுள்ள கடவுள். மற்றொரு தீர்க்கதரிசி அதே விலையேறப்பெற்ற பண்பை விவரிக்கிறார்." பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு இராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய்ப் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால் நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு இராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன்." (எரேமியா18:7-10)

## யோனா ஏன் ஓடினார்?

யோனா தப்பி ஓடுவதற்கான நோக்கம் யோனா 4:2ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது, "கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி - "ஆ கர்த்தாவே, நான் என் தேசத்தில் இருக்கும்போதே

நான் இதைச் சொல்லவில்லையா ? இதினிமித்தமே நான் முன்னமே தர்ஷீசுக்கு ஓடிப்போனேன், நீர் இரக்கமும் மன உருக்கமும் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவரும், தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமான தேவனென்று அறிவேன்."

பயணத்தில் ஆபத்துகள் இருந்ததால் யோனா நினிவேவை விட்டு ஓடிப்போகவில்லை.

ஒரு எபிரெய தீர்க்கதரிசி தங்கள் நகரத்தின் அழிவை அறிவித்ததினால், அசீரியர்கள் தனக்கு என்ன செய்வார்கள் என்ற பயத்தினாலும் அவர் தப்பி



ஓடவில்லை. கடவுளின் கிருபையால் யோனா ஓடிப்போனார்!நினிவே மக்களைக் காப்பாற்ற அவருக்கு விருப்பமில்லை.அவர்கள் அவருடைய ஜனமாகிய இஸ்ரயேலின் எதிரிகளாக இருந்தனர். அவர்கள் தங்கள் தாக்குதல்களில் ஆவேசம் கொண்டவர்களாக இருந்தனர் (2இராஜாக்கள் 8:12 )யோனா அவர்களை அழிக்க விரும்பினார். ஆனாலும் யெகோவா தேவன் இரக்கமும் எல்லையற்ற கிருபையும் கொண்ட கடவுள் என்பதை அவர் அறிந்திருந்தார்.

யோனாவின் புத்தகத்தின் இறுதி வார்த்தைகள் கடவுளின் வார்த்தைகள். "வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்." (யோனா4:11 )நினிவேயின் மக்கள் தொகை 600,000 என மதிப்பிடப்பட்டுள்ளது, மேலும் சுற்றியுள்ள பகுதிகளையும் சேர்ந்து இரண்டு மில்லியன் வரை இருக்கலாம். " வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேர்கள் " என்று கடவுள் மக்களை விவரித்தார்.இது நன்மைக்கு தீமைக்கும் இடையில் பகுத்தறிவு காண முடியாத அளவுக்கு சிறிய குழந்தைகளை விவரிக்கும் ஒரு மரபுத்தொடராகும். அவர்ளுடைய பெற்றோரின் குற்றங்களுக்கு அவர்களைப் பொறுப்பாக்க முடியாது. யோனா இவர்களின் மீது இரக்கம் காட்ட முடியாதா ? குழந்தைகள் மீது இல்லையென்றால், கால்நடைகள் அழிவுக்கு உள்ளாகும் அளவுக்கு என்ன தவறு செய்தன ?

## பெரிய மீன்

ஒரு பெரிய மீனால் விழுங்கப்பட்டு மூன்று நாட்கள் உயிர்வாழ்வது சிலருக்கு கேள்விக்குறியாகியுள்ளது. ஆயினும் யோனாவின் அனுபவம் மொத்தத்தில் தனித்துவமானதல்ல. இதேபோன்றவைகள் 1911 ஆம் ஆண்டிலேயே நியூயார்க் செய்தித்தாள்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஜேம்ஸ் பார்ட்லி என்ற மாலுமிக்கு ஏற்பட்ட இதேப் போன்ற அனுபவத்தைப் பற்றிய மிக விரிவான பதிவு ஆகஸ்ட் 25, 1891 அன்று பிரெஞ்சு ஜர்னல் டெஸ் டெபட்ஸ் (French Journal des Debats)பதிப்பில் வெளியாகியுள்ளது. ஏ. ஓ. ஹட்சன், A.O.Hudson" திமிஷன் ஆஃப் ஜோனா" ("The Mission of Jonah,")வில், பண்டைய மதச்சார்பற்ற வரலாற்றாசிரியர்களான பிளினி, ஸ்ட்ராபோ, ஓவிட் மற்றும் ஹெரோடோடஸிடமிருந்து கதையை கவனமாக மறுகட்டமைக்கிறார்.

## மூன்று பகல் மூன்று இரவு

"மனுஷகுமாரன் பூமியின் இருதயத்தில் மூன்று பகலும் மூன்று இரவும் இருப்பார்" என்பது "யோனாவின் அடையாளம்" என்று இயேசு கூறினார். இயேசு வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்தில் அடக்கம் செய்யப்பட்டு ஞாயிற்றுக்கிழமை காலை சூரிய உதயத்திற்கு அருகில் உயிர்த்தெழுந்திருந்தால், அவர் கல்லறையில் இரண்டு இரவு நேரங்கள் (வெள்ளி மற்றும் சனிக்கிழமை) மற்றும் ஒரு பகல் நேர காலம் (சனிக்கிழமை ) மட்டுமே இருந்திருப்பார், மொத்தம் சுமார் 36 முதல் 38 மணி நேரம் வரை இருந்திருப்பார் என்று விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சில விமர்சகர்கள், "மூன்று பகல்களும் மூன்று இரவுகளும் என்பது தற்போதைய எபிரெய வெளிப்பாடு, இது எழுபத்திரண்டு மணிநேர இடைவெளியை காலவரிசைப்படி துல்லியமாக விவரிக்கவில்லை, ஆனால் "நாளைக்கு மறுநாள்" அல்லது நேற்றுக்கு முந்தைய நாள்" போன்ற சொற்றொடர்களால் நேரத்தைக் குறிக்கும் நமது முறைக்கு ஒத்திருக்கிறது" என்று சுட்டிக்காட்டுகின்றனர்.(1சாமுயேல் 30:1, 12ம் வசனத்தை ஒப்பிட்டு பார்க்கவும், எஸ்தர் 4:16,5:1,மத்தேயு12:40)

புதிய ஏற்பாட்டில், "மூன்றாம் நாள்" என்ற சொல் சுமார் பதினொரு முறை வருகிறது. உதாரணமாக, மூன்று நாள் காலப்பகுதியில்



கெத்செமனேயில் நடந்த காட்டிக்கொடுத்தல். விசாரணை மற்றும் கசையடி, அத்துடன் உண்மையான சிலுவையில் அறையப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது (மத்தேயு16:21) ஆகியவை அடங்கும். இந்த நிகழ்வுகள் 72 மணிநேரத்தை முழுமையாக உள்ளடக்கவில்லை.

"பூமியின் இருதயத்தில்" என்ற சொற்றொடரையும் சொல்லர்த்தமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இயேசு பூமியின் "இருதயத்தில்" அடக்கம் செய்யப்படாமல், ஒரு மலையின் முகப்பில் தோண்டப்பட்ட ஒரு குகையில் அடக்கம் செய்யப்பட்டார். இயேசு கல்லறையில் இருந்தபோது மரித்திருந்ததுப் போல் இல்லாமல், யோனா "மீனின் வயிற்றில்" உயிரோடிருந்தார். ஆயினும் மீனின் வயிற்றில் இருந்த வரை அவருடைய செயல்பாடுகள் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கவில்லை. மீன் சென்ற இடத்திற்கு யோனா சென்றார். அதேபோல இயேசுவும் கெத்சமனே தோட்டத்தில் பிடிக்கப்பட்டபோது "இதுவோ உங்களுடைய வேளையும் அந்தக்காரத்தின் அதிகாரமுமாயிருக்கிறது என்று" (லூக்கா 22:53) இயேசு கூறினார். அன்றிலிருந்து, இயேசுவின் தலைவிதி மற்றவர்களின் கைகளில் இருந்தது. அவர்கள் எங்கு சென்றார்களோ, அங்கேயே அவரும் சென்றார்.

இந்த விஷயத்தில், அவர் கைது செய்யப்பட்டதிலிருந்து உயிர்த்தெழுதல் வரையிலான மூன்று பகல்கள் மற்றும் மூன்று இரவுகளைக் கணக்கிடுவது, அவர் "பூமியின் இருதயத்தில்" இருப்பதற்கான காலத்தை கிட்டத்தட்ட 24 மணிநேரம் நீட்டிக்கிறது. இந்தக் காலம் இன்னும் முழு 72 மணிநேரத்திற்கு சமமாக இல்லை, ஆனால் அது மூன்று நாட்காட்டி நாட்களின் பகுதிகளை உள்ளடக்கியது (யூத கணக்கீட்டின்படி, நிசான் மாதத்தின் பதினான்காம், பதினைந்தாம் மற்றும் பதினாறாம் தேதி)

## நிநுவேபட்டணத்தின் அளவு

யோனா 3:3, நினிவேயை "மூன்று நாள் பயண தூரம்" கொண்ட நகரம் என்று விவரிக்கிறது. முதல் நூற்றாண்டு சரித்திராசிரியர் டியோடோரஸ் சிக்குலஸ் (Diodorus Siculus) தனது பிப்லியோதெக்கா ஹிஸ்டோரிகாவில் (Bibliotheca Historica) நினிவேயின் சுவர்கள் 150 பர்லாங்குகள் நீளமும் 90 பர்லாங்குகள் அகலமும், 480 திசைகாட்டியும் கொண்டவை, சுவர்கள் 100 அடி உயரமும், மூன்று ரதங்கள் அவற்றின் மீது செல்லக்கூடிய அளவுக்கு தடிமனும் கொண்டவை, அவற்றின் மீது 1500கோபுரங்கள் இருந்தன, ஒவ்வொன்றும் 200 அடி உயரம் கொண்டவை" என்று விவரிக்கிறார். நானூற்று எண்பது கிரேக்க பர்லாங்குகள் சுமார் 60 மைல் சுற்றளவு கொண்டதாக இருக்கும்.

இருப்பினும், சமீபத்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள் நகரத்தின் சுவர்களைக் கண்டுபிடித்துள்ளன, மேலும் அவை 7.5 மைல் சுற்றளவு மட்டுமே இருப்பதைக் கண்டறிந்தனர்.

இரண்டு கருத்துக்களுக்கும் இடையிலான இணக்கம் என்னவென்றால், நகரத்தின் உள் சுவர்கள் இருந்தன, அதைத் தொடர்ந்து புறநகர்ப் பகுதியைச் சுற்றி இரண்டாவது தொகுதி சுவர்கள் இருந்தன, அதில் எந்தவொரு சாத்தியமான முற்றுகையையும் தாங்கும் பயிர்களுக்கான வயல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தது. (சர்வதேச தரநிலை பைபிள் கலைக்களஞ்சியம், "நினிவே")International Standard Bible Encyclopedia, "Nineveh").

## நிநுவேபட்டணத்தின் மனமாற்றம்

ஆச்சரியப்படும் விதமான, ஒரு புறஜாதி நகரம், குறிப்பாகயெகோவா தேவனை அங்கீகரிக்காமல், அதன் சொந்த கடவுள்களைக் கொண்ட நகரம், ஒரு சில நாட்கள் பிரசங்கித்த பிறகு மனந்திரும்பியது. இருப்பினும், இந்த மற்ற தெய்வங்களின் வழிபாடு யோனாவின் பிரசங்கத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள வைத்திருக்கலாம். ஒட்டகக் கூட்டங்கள் பெரும்பாலும் எகிப்துக்கும் அசீரியாவுக்கும் இடையிலான வர்த்தகப் பாதைகளில் பயணித்தன.

இந்தப் பாதைகள் யோனா வாழ்ந்த யோப்பா நகரத்தின் வழியாகச் சென்றன. சந்தேகத்திற்கு இடமின்றி, யோனா ஒரு பெரிய மீனிடமிருந்து அற்புதமாக மீட்கப்பட்டது பொதுவான வதந்தியாக மாறியிருக்கும். அசீரியாவில் இருந்த வணிக வண்டி ஓட்டுநர்கள் இதை அங்குள்ள மக்களுக்குத் தெரிவித்திருப்பார்கள்.

அசீரிய தெய்வங்களின் முக்கிய கடவுள்களில் ஒருவர் ராம்மன், அவர் ரிம்மன் என்றும் அழைக்கப்பட்டார். புயல் கடவுளான ரிம்மன், சூறாவளிகள், புயல்கள் மற்றும் மழையைக் கட்டுப்படுத்துவதாக நம்பப்பட்டது. ரிம்மோனின் ஆட்சிப் பகுதியிலிருந்து யோனா

விடுவிக்கப்பட்டிருப்பது நிச்சயமாக அவருடைய நற்பெயரை அதிகரித்திருக்கும். எனவே, இந்த தீர்க்கதரிசியின் கதையில் ஒரு முரண்பாடான திருப்பம் உள்ளது. கடவுளின் கிருபையிலிருந்து தப்பி ஓடியதும், அதைத் தொடர்ந்து கடலில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டதும் அவரது பணியின் வெற்றிக்கு பங்களித்திருக்கலாம்.



யோனா3:7ல், நகரத்தின் மனந்திரும்புதலின் அடையாளமாக கால்நடைகள் கூட உபவாசம் இருந்திருக்க வேண்டும் என்று நாம் வாசிக்கிறோம். மெக்கிளின்டாக் மற்றும் ஸ்ட்ராங்கின் பைபிள் கலைக்களஞ்சியம் குறிப்பிடுவது என்னவென்றால், "முரட்டுத்தனமான படைப்பின் கட்டாயமான துக்கம், பாரசீக தளபதி மாசிஸ்டியஸ் மீது செய்யப்பட்ட புலம்பலில் குறைந்தபட்சம் ஒரு ஒப்புமையைக் கொண்டுள்ளது." குதிரைகள் மற்றும் சுமை தூக்கும் விலங்குகள் மொட்டையடிக்கப்பட்டன" (Herodotus, ix, 24) புளூடார்ச்சின் கூற்றுப்படி, ஹெபஸ்டியனின் மரணத்தின் போது இதேபோன்ற வழக்கத்தைக் கடைப்பிடிக்க அலெக்சாண்டர் கட்டளையிட்டார்" (Volume IV, pages 991, 992).

## அமணக்குச் செடி மற்றும் காற்று

இறுதி அத்தியாயத்தில், கடவுள் அந்த நகரத்திற்கு என்ன செய்வார் என்பதைப் பார்க்க யோனா நினிவேக்கு அருகிலுள்ள ஒரு மலையில் ஏறினார்.நாற்பது நாள் சோதனைக் காலத்திற்குப் பிறகு, கடவுள் நகரத்தை அழிக்க மறுத்துவிட்டார். யோனாவுக்கு மலையின் மேல் வெப்பம் தாங்க முடியாத அளவுக்கு அதிகமாக இருந்தது, அவருக்கு ஒரு பாடம் கற்பிக்க கடவுள் ஒரு பாதுகாப்பான ஆமணக்குச் செடியை வழங்கினார். ஆமணக்கு என்பது ஒரு விளக்கெண்ணெய் செடி. இது பொதுவாக எட்டு முதல் பத்து அடி உயரம் வளரும் ஒரு மரம், ஆனால் வெப்பமண்டலங்களில் 40 அடி உயரத்தை எட்டும். யோனா அதன் நிழலைப் போற்றினார்.

யோனாவுக்கு ஒரு அர்த்தமுள்ள பாடத்தைக் கற்பிக்க, கடவுள் அந்த ஆமணக்கு செடி "பட்டுபோகும்படிக்கு" ஒரு புழுவை "ஆயத்தம்" செய்தார். கூடுதலாக, வெப்பத்தைத் தீவிரப்படுத்த கடவுள் ஒரு வன்முறையான கிழக்குக் காற்றையும் "ஆயத்தம்" செய்தார்.

கர்த்தருடைய முதன்மையான அக்கறை இஸ்ரயேலின் நன்மைக்காக மட்டுமல்ல, அனைத்து மக்களின் நன்மைக்காகவும் இருக்கிறது என்ற பாடத்தை விருப்பமற்ற அந்த தீர்க்கதரிசிக்கு கற்பிப்பதற்காகவே தேவன் இந்த ஏற்பாடுகளைச் செய்தார்.எனவே, யோனாவின் கதையில் இரண்டு கிழக்குக் காற்றுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் அத்தியாயத்தில், ஒரு கிழக்குக் காற்று, மாலுமிகள் யோனாவைக் கடலில் வீசச் செய்தது. இறுதி அத்தியாயத்தில், அனைத்து மக்களையும் ஆசீர்வதிக்க வேண்டும் என்று கடவுளின் விருப்பத்தின் பாடத்தை ஒரு கிழக்குக் காற்று வலியுறுத்தியது. கடவுள் ஒரு ஞானமுள்ள ஆசிரியர்! நாம் அவைகளிடமிருந்து கற்றுக்கொள்ளும் வரை அவர் தொடர்ந்து தம்முடைய பாடங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார். யோபு ஞானமாக குறிப்பிட்டது போல,"இதோ, தேவன் மனுஷனுடைய ஆத்துமாவைப் படுகுழிக்கு விலக்குகிறதற்கும், அவனை ஜீவனுள்ளோரின் வெளிச்சத்தினாலே பிரகாசிப்பிக்கிறதற்கும்" (யோபு33:29) எனவே "இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்று யோனா தைரியமாக அறிவித்தார். நாற்பது நாட்கள் கடந்தபின், கடவுள் விரும்பிய மனந்திரும்புதல் அடையப்பட்டதால், தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் இருந்தது. நாற்பது ஆண்டுகள் கடந்த பிறகும், நினிவே அப்படியே இருந்தது

ஆனால் பாபிலோனியர்களின் படையெடுப்பின் மூலம் கடவுள் அந்த மகா நகரத்தை அழிக்க ஒரு ஒரு காலம் வந்தது.

கடவுளுடைய வார்த்தைகள் நிறைவேறுவது உறுதி. மனந்திரும்புவதற்குப் போதுமான நேரத்தை அனுமதிக்க அவர் அவற்றை ஒரு காலத்திற்கு தாமதப்படுத்தலாம். ஆனால் அவைகள் கட்டாயமாக நிறைவேறும். கடவுளின் மற்றொரு தீர்க்கதரிசி அதைச் சொன்னது போல், "குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது, முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது, அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு, அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை."(ஆபகூக்2:3)

## ஒரு அர்த்தமுள்ள பாடம்

நம்முடைய சொந்த பாவ உலகத்தைக் கருத்தில் கொள்ளும்போது யோனாவுக்குச் சொன்ன செய்தி பொருத்தமானது. உபத்திரவக் காலத்தில் மனிதனின் அமைப்புகள் நொறுங்கி விழும். இருப்பினும், கடவுள் உலகை உயர்ந்த ஒழுக்க தரத்திற்கு உயர்த்த விரும்புகிறார், மனிதர்கள் தங்கள் அண்டை வீட்டாரை எவ்வாறு நேசிப்பது மற்றும் அவர்களின் சிருஷ்டிகரை எவ்வாறு வணங்குவது என்பதைக் கற்பிக்க விரும்புகிறார். கடவுளின் அனைத்து செயல்களும் அவரது இரக்கமும் கருணையும் நிறைந்த இருதயத்தால் வழிநடத்தப்படுகின்றன.

## என் நீதியுள்ள ஊழியன்

# இயேசுவின் பலியின் காட்சிகள்



— David Stein

"அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார், என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார், அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்."(ஏசாயா53:11)

மேசியாவின் வாழ்க்கையைப் பற்றிய பல விவரங்கள் எபிரெய வேதாகமத்தில் தீர்க்கதரிசனமாக முன்னறிவிக்கப்பட்டன. இயேசு தனது தியாக மரணத்தைப் பற்றி முன்கூட்டியே என்ன அறிந்திருந்தார் ?என்ற ஒரு சுவாரஸ்யமான கேள்வி தோன்றுகிறது. எபிரெய வேதாகமத்தைப் பற்றிய அவருடைய பரிபூரண அறிவு, அவருக்கு என்ன நடக்கப்போகிறது என்பதைப் பற்றி நிறைய கற்றுக்கொண்டார் என்பதைக் குறிக்கிறது. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டை குறைத்து மதிப்பிடுவதற்காக அல்ல. இருப்பினும், அவர் அறிந்திருந்த எண்ணற்ற தீர்க்கதரிசன விவரங்களை நாம் கவனிக்கும்போது, அவர் என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார் என்பதிலும் ஒவ்வொரு அனுபவத்தையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தார் என்பதில் நமக்கு எந்த சந்தேகமும் இல்லை. இயேசு தனது மரண தியாகத்தைப் பற்றி என்ன அறிந்திருக்க முடியும் என்பதையும், அந்தத் தகவலின் மூலத்தையும் பற்றிய ஒரு சுருக்கமான ஆய்வு இங்கே உள்ளது. இயேசு பூமிக்கு வந்து துன்பப்பட்டு மரிக்க வேண்டும் என்பது ஆரம்பத்திலிருந்தே கடவுளின் நோக்கம் என்பதை புரிந்துகொண்டார்.

● வெளிப்படுத்துதல் 13:8 —"உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்."

● 1பேதுரு 1:19, 20 — "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக் கடைசிக் காலங்களில் வெளிப்பட்டார்."

● எபேசியர் 1:4 —"தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே,"

● அப்போஸ்தலர் 3:18 — "கிறிஸ்து பாடுபடவேண்டுமென்று தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்."

● மத்தேயு 20:28 — "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்."

### இவைகளையே, இயேசு தம்முடைய மரணத்தைக் குறித்து முன்னறிந்திருந்தார்

(1) வருடம், தானியேல் 9:25-27லில் இருந்து -"இப்போதும் நீ அறிந்து உணர்ந்து கொள்ளவேண்டியது என்னவென்றால் - எருசலேமைத் திரும்ப எடுப்பித்துக் கட்டுகிறதற்கான கட்டளை வெளிப்படுவது முதல், பிரபுவாகிய மேசியா வருமட்டும் ஏழுவாரமும், அறுபத்திரண்டு வாரமும் செல்லும், அவைகளில் வீதிகளும் அலங்கங்களும் மறுபடியும் கட்டப்படும், ஆனாலும் இடுக்கமான காலங்களில் இப்படியாகும். அந்த அறுபத்திரண்டு வாரங்களுக்குப் பின்பு மேசியா சங்கரிக்கப்படுவார், ஆனாலும் தமக்காக அல்ல, நகரத்தையும் பரிசுத்த ஸ்தலத்தையும் வரப்போகிற பிரபுவின் ஜனங்கள் அழித்துப்போடுவார்கள், அதின் முடிவு ஜலப்பிரவாகம் போல இருக்கும் முடிவுபரியந்தம் யுத்தமும் நாசமும் உண்டாக நியமிக்கப்பட்டது. அவர் ஒரு வாரமளவும் அநேகருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்தி, அந்த வாரம் பாதி சென்ற போது பலியையும் காணிக்கையையும் ஒழியப்பண்ணுவார், அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான், நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நிர்மூலம் பாழாக்குகிறவன்மேல் தீருமட்டும் சொரியும் என்றான்."

எருசலேமை திரும்ப கட்டுவதற்கான வார்த்தை கிமு 455 இல் வெளிப்பட்டது. நெகேமியா*2:1-6* , "அர்த்தசஷ்டா இராஜாவின் இருபதாம் வருஷம் நிசான் மாதத்திலே, திராட்சரசம் இராஜாவுக்கு முன்பாக வைத்திருக்கையில், நான் அதை எடுத்து அவருக்குக் கொடுத்தேன், நான்

முன் ஒருபோதும் அவர் சமுகத்தில் துக்கமாயிருந்ததில்லை. அப்பொழுது இராஜா என்னைப்பார்த்து - நீ துக்கமுகமாயிருக்கிறது என்ன ? உனக்கு வியாதியில்லையே, இது மனதின் துக்கமே ஒழிய வேறொன்றும் அல்ல என்றார், அப்பொழுது நான் மிகவும் பயந்து, இராஜாவை நோக்கி - இராஜா என்றைக்கும் வாழ்க, என் பிதாக்களின் கல்லறைகள் இருக்கும் ஸ்தலமாகிய நகரம் பாழனதும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதுமாய்க் கிடக்கும்போது, நான் துக்கமுகத்தோடு இராதிருப்பது எப்படி என்றேன். அப்பொழுது இராஜா என்னைப்பார்த்து - நீ கேட்கிற காரியம் என்ன என்றார். அப்பொழுது நான் - பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபம்பண்ணி, இராஜாவைப் பார்த்து - இராஜாவுக்குச் சித்தமாயிருந்து, அடியேனுக்கு உமது சமூகத்தில் தயை கிடைத்ததானால், என் பிதாக்களின் கல்லறைகளிலிருக்கும் பட்டணத்தைக் கட்டும்படி, யூதா தேசத்துக்கு நீர் என்னை அனுப்ப வேண்டிக்கொள்ளுகிறேன் என்றேன். அப்பொழுது இராஜஸ்திரீயும் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். இராஜா என்னைப் பார்த்து - உன் பிரயாணம் எத்தனைநாள் செல்லும், நீ எப்பொழுது திரும்பிவருவாய் என்று கேட்டார். இவ்வளவுகாலம் செல்லுமென்று நான் இராஜாவுக்குச் சொன்னபோது, என்னை அனுப்ப அவருக்குச் சித்தமாயிற்று.

69 வாரங்கள் x 7 = 483 நாட்கள்

483 நாட்கள் = 483 வருடங்கள்

483 + 455 கிமு = கிபி 29

வாரத்தின் பாதி = 3½ வருடங்கள்

இயேசு மரித்தது கிபி 29 + 3½ வருடங்கள் = கிபி 33




நிசான் மாதம் - நாள் 14 ஆம் தேதி. யாத்திராகமம் **12:2-3, 5-6**

(2) நிசான் மாதம் - 14ம் தேதி - "இந்த மாதம் உங்களுக்குப் பிரதான மாதம், இது உங்களுக்கு வருஷத்தின் முதலாம் மாதமாயிருப்பதாக. நீங்கள் இஸ்ரயேல் சபையார் யாவரையும் நோக்கி - இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத்தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்து கொள்ளக்கடவர்கள். அந்த ஆட்டுக்குட்டி பழுதற்றதும் ஆணும் ஒரு வயதுள்ளதுமாய் இருக்க வேண்டும், செம்மறியாடுகளிலாவது வெள்ளாடுகளிலாவது அதைத் தெரிந்து கொள்ளலாம். அதை இந்த மாதம் பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து.."

3) நேரம் - பிற்பகல் 3 மணி யாத்திராகமம் **12:6** "அதை இந்த மாதம்பதினாலாம் தேதி வரைக்கும் வைத்திருந்து, இஸ்ரயேல் சபையின் ஒவ்வொரு கூட்டத்தாரும் சாயங்காலத்தில் அதை அடித்து, "(2953 மறுபதிப்பை பார்க்கவும்)

(4) அவர் சிலுவையில் அறையப்படுவார். கலாத்தியர் *3:13*, "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்."

யோவான் 3:14, "சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப் பட்டதுபோல மனுஷகுமாரனும்..... உயர்த்தப்பட வேண்டும்."

யோவான் 12:32, 33"நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார். தான் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறாரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்."

உபாகமம் 21:22, 23"கொலை செய்யப்பட்ட ஒருவன்மேல் சாவுக்குப் பாத்திரமான பாவம் உண்டாயிருக்க, அவனைக் கொலை செய்யும்படி மரத்திலே தூக்கிப்போடுவாயானால், இரவிலே அவன் பிரேதம் மரத்திலே தொங்கலாகாது, அந்நாளில்தானே அதை அடக்கம்பண்ணவேண்டும், தூக்கிப்போடப்பட்டவன் தேவனால் சபிக்கப்பட்டவன், ஆகையால் உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் உன் தேசத்தைத் தீட்டுப்படுத்தாயாக."

மாம்ச இஸ்ரயேலில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கும் வழக்கமான முறை கல்லெறிதல் ஆகும். ஆனால் குற்றம் மிகவும் கொடூரமானதாக இருந்தால், தண்டனை விதிக்கப்பட்டவர் முதலில் கல்லெறிந்து பின்னர் ஒரு

மரத்தில் தொங்கவிடப்படுவார், இது அவர் கடவுளால் சபிக்கப்பட்டவர் என்பதைக் காட்டுகிறது. ஒரு மரத்தில் தொங்கவிடப்பட்டிருப்பது, இயேசு மிகவும் மோசமான குற்றவாளிக்குக் கூட ஆதாமின் சாபத்தை ஏற்றுக்கொண்டார் என்பதைக் குறிக்கிறது. ஒரு மரத்தில் தொங்கவிடப்படுவது, ஒருவர் நியாயப்பிரமாணத்தின் கீழ் சபிக்கப்பட்டவர் என்பதைக் குறிக்கிறது. இதன் பொருள் இயேசுவும் நியாயப்பிரமாணத்தின் சாபத்தைச் சுமந்தார் என்பதாகும்.

யோசுவா 8:29"ஆயியின் இராஜாவை ஒரு மரத்திலே தூக்கிப்போடுவித்து, சாயங்காலமட்டும் அதிலே தொங்கவிட்டான், சூரியன் அஸ்தமித்தபின்பு யோசுவா அவன் உடலை மரத்தைவிட்டு இறக்கச் சொன்னான், அதைப் பட்டணவாசலில் போட்டு, இந்நாள்வரைக்கும் இருக்கிற பெரிய கற்குவியலை அதின்மேல் குவித்தார்கள்." யோசுவா 10:26-"அதற்குப்பின்பு யோசுவா அவர்களை வெட்டிக் கொன்று, ஐந்து மரங்களிலே தூக்கிப்போட்டான், சாயங்காலமட்டும் மரங்களில் தொங்கினார்கள்."

ரோமானியர்கள் பின்னர் உருவாக்கியது போல, சிலுவையில் அறையப்படுவது நியாயப்பிரமாணத்தின் போது அறியப்படவில்லை. ரோமானிய கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்த இயேசு, சிலுவையில் அறையப்படுவதன் மூலம் தான் மரிக்க நேரிடும் என்ற உண்மையை உபாகமத்தின் உரையோடு இணைத்திருப்பார்.

நம்முடைய கர்த்தரின் சிலுவை மரணத்தின் மற்றொரு முன்னறிவிப்பு, பாவநிவாரண நாளில் காளையின் இரத்தத்தைத் தெளிக்கும் விதத்தில் காணப்படுகிறது.

லேவியாராகமம் 16:14"பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன்."

"மேல் தெளித்து" மற்றும் "முன்பாக" என்ற வார்த்தைகள் செங்குத்து மற்றும் கிடைமட்ட அசைவைக் குறிக்கின்றன, இதனால் இரத்தம் சிலுவையின் வடிவத்தில் தெளிக்கப்படுகிறது.

(5) அவர் நீரிழப்பு நோயால்( dehydration) பாதிக்கப்படுவார். யாத்திராகமம் 12:9"பச்சையாயும் தண்ணீரில் அவிக்கப்பட்டதாயும் அல்ல, அதின் தலையையும் அதின் தொடைகளையும் அதற்குள்ள யாவையும் ஏகமாய் நெருப்பினால் சுட்டதாய் அதைப் புசிப்பீர்களாக."பஸ்கா ஆட்டுக்குட்டியைத் தயாரிப்பதில் தண்ணீர் தடைசெய்யப்பட்டது.

வழக்கமாக சிலுவையில் அறையப்பட்டவர்கள், மரிக்கும் அளவுக்கு நீரிழப்பு (dehydrated) நேரிடும். பாதிக்கப்பட்டவர் மரணமடையும் சிலுவையில் அறையப்பட்டதில், பாதிக்கப்பட்டவர் மரணமடையும் அளவுக்கு நீர் இழப்புக்கு ஆளானார். காயங்களின் வலி, வீக்கம் மற்றும் வீக்கத்தால் வியர்வை வெளியேறியதுடன், காய்ச்சல் மற்றும் இரத்த இழப்பும் ஏற்பட்டது. இவை அனைத்தும் கடுமையான நீர் இழப்புக்கு dehydrationபங்களித்தன. இயேசு சிலுவையில் இருந்து பேசியபோது இதை வெளிப்படுத்தினார்.

யோவான் 19:28."அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக தாகமாயிருக்கிறேன் என்றார்."அதே காரியம் தீர்க்கதரிசனமாகவும் சொல்லப்பட்டது. சங்கீதம் 69:21"என் ஆகாரத்தில் கசப்புக் கலந்து கொடுத்தார்கள், என் தாகத்துக்குக் காடியைக் குடிக்கக்கொடுத்தார்கள். "அவரது மரணத்திற்கு நீர் இழப்பு ஒரு காரணமாக இருந்திருக்க வாய்ப்புள்ளது.

(6)அவனுடைய எலும்புகள் எதுவும் முறிக்கப்படக்கூடாது என்பதற்காக - யாத்திராகமம் 12:46"அதை ஒவ்வொரு வீட்டிற்குள்ளும் புசிக்க வேண்டும், அந்த மாம்சத்தில் கொஞ்சமாகிலும் வீட்டிலிருந்து வெளியே கொண்டுபோகக்கூடாது, அதில் ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது.

எண்ணாகமம் 9:12"விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள்."

சங்கீதம் 34:20"அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார், அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை."

யோவான் 19:36"அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது."

### அந்தி சந்தி பலி

(7)அவர் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணிக்கு இறக்கும் வரை சிலுவையில் இருப்பார்.

இந்த இரண்டு பலிகளும் ஒவ்வொரு நாளும் செலுத்தப்பட்டன. காலை பலி சுமார் காலை 9 மணிக்கும், மாலை பலி பிற்பகல் 3 மணிக்கும் செலுத்தப்பட்டது.யாத்திராகமம் 29:38-42 "பலிபீடத்தின்மேல் நீ பலியிடவேண்டியது என்னவெனில், இடைவிடாமல் ஒவ்வொருநாளிலும்



ஒரு வயதான இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும். ஒரு ஆட்டுக்குட்டியைக் காலையிலும், மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலும் பலியிடுவாயாக. ஒரு மரக்காலிலே பத்திலொரு பங்கானதும், இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும், பானபலியாகக் கால்படி திராட்சரசத்தையும், ஒரு ஆட்டுக்குட்டியுடனே படைப்பாயாக. மற்ற ஆட்டுக்குட்டியை மாலையிலே பலியிட்டு, காலையிலே செலுத்தின போஜனபலிக்கும் பானபலிக்கும் ஒத்தபிரகாரம் அதைக் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகப் படைக்கக்கடவாய். உன்னுடனே பேசும்படி நான் உங்களைச் சந்திக்கும் இடமாயிருக்கிற ஆசாரிப்புக் கூடாரத்தினுடைய வாசலாகிய கர்த்தருடைய சந்நிதியிலே, உங்கள் தலைமுறைதோறும் செலுத்தப்படவேண்டிய நித்திய சர்வாங்க தகனபலி இதுவே.

எண்ணாகமம் 28:3-8, ."மேலும் நீ அவர்களை நோக்கி - நீங்கள் கர்த்தருக்குச் செலுத்தவேண்டிய தகனபலி என்னவென்றால் - நித்திய சர்வாங்க தகனபலியாக நாடோறும் ஒரு வயதான பழுதற்ற இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பலியிடவேண்டும். காலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் மாலையில் ஒரு ஆட்டுக்குட்டியையும் பலியிட்டு, போஜனபலியாக ஒரு மரக்காலிலே பத்தில் ஒரு பங்கானதும் இடித்துப் பிழிந்த காற்படி எண்ணெயிலே பிசைந்ததுமாகிய மெல்லிய மாவையும் செலுத்தக்கடவீர்கள். இது சீனாய் மலையிலே கட்டளையிடப்பட்ட நித்திய சர்வாங்க தகனபலி, இது கர்த்தருக்குச் சுகந்த வாசனைக்கான தகனபலி. காற்படி திராட்சரசம் ஒரு ஆட்டுக்குட்டிக்கு அடுத்த பானபலி, பரிசுத்த ஸ்தலத்திலே கர்த்தருக்கு அந்த இரசம் பானபலியாக வார்க்கப்படக்கடவது. காலையின் போஜனபலிக்கும் அதின் பானபலிக்கும் ஒப்பாகவே மாலையில் மற்ற ஆட்டுக்குட்டியையும் கர்த்தருக்குச் சுகந்த வாசனையான தகனபலியாகச் செலுத்தக்கடவீர்கள்."

Reprint 2953 —மீண்டும் பகல் இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கப்பட்டது, சூரியன் உதித்ததிலிருந்து நண்பகல் காலை வரை, அதன் பிறகு, சூரியன் மறையும் வரை, மாலை.... மீண்டும், காலை மற்றும் மாலை பலிகள் மற்றும் ஜெபங்களை ஒழுங்குபடுத்துவதற்காக, காலை மற்றும் மாலை இரண்டு சம பாகங்களாகப் பிரிக்கப்பட்டது.

காலைப் பலியும் ஜெபங்களையும் சூரிய உதயத்திற்கும் மூன்றாம் மணி நேரத்திற்கும் இடைப்பட்ட எந்த நேரத்திலும், அதாவது காலை 9 மணிக்கும், மாலைப் பலியும் பிரார்த்தனையும்.... முதல் மாலையின் எந்த நேரத்திலும் செலுத்த அனுமதிக்கப்பட்டது.

எபிரெய மொழியில், எரெவ் கட்டோன் (erev katon), குறுகிய அல்லது சிறிய மாலை நேரம், அதாவது, நண்பகல் முதல் ஒன்பதாம் மணி நேரம் வரை, அல்லது பிற்பகல் 3 மணி வரை, அந்த நேரத்திலிருந்து சூரியன் மறையும் வரை, எபிரெய மொழியில் எரெவ் கடோல் என்று அழைக்கப்படுகிறது, அதாவது, பெரிய சாயங்காலம். இந்த இரண்டு மாலைகளுக்கு இடையில்தான் பாஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட இருந்தது, பதிவு செய்யப்பட்டுள்ளபடி உலகத்தின் பாவத்தை நீக்கும் கடவுளின் நிஜமான ஆட்டுக்குட்டியானஇயேசுவும் அதற்கு நிகரானவராகக் கொல்லப்பட்டார். இந்த விலங்குகளுடன் பின்வருவனவும் இருந்தன -

- பத்தில் ஒரு பங்கு மாவு = 1 ஓமர், கிறிஸ்துவின் சரீரம்
- 3 படி ஒலிவ எண்ணெய் = பரிசுத்த ஆவி
- 3 படி திராட்சை ரசம் = மனிதனின் இருதயத்தை மகிழ்வித்தல் - மகிழ்ச்சி

அப்பம் மற்றும் ரசம் சேர்ப்பது, ஆண்டவரால் நிறுவப்பட்ட நினைவுக்கூருதலின் அப்பம் மற்றும் ரசம் மிகவும் வியத்தகு முறையில் இணைகிறது!

(8)அவருடைய ஆடைகள் எடுக்கப்படும் என்று ....சங்கீதம் 22:18."என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடுகிறார்கள்."

மத்தேயு 27:35"அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவர்கள் சீட்டுப்போட்டு அவருடைய வஸ்திரங்களைப் பங்கிட்டுக் கொண்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போட்டார்கள் என்று



தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

இயேசுவின் அனுபவங்களை முன்னறிவித்த இன்னும் சில தீர்க்கதரிசனங்கள் இருக்கலாம்.இதன் விளைவாக, இயேசு தான் அனுபவிக்கப் போகும் துன்பத்தின் தன்மையையும் விவரங்களையும் அறிந்திருந்தார், ஆனால் வேதவசனங்களின்படி அதைக் கட்டுப்படுத்தினார். அவர் சிலுவையில் அறையப்படுவதற்கு வழிவகுக்கும் தீர்க்கதரிசன நிகழ்வுகளின் தொடருக்கு அடிபணிந்தார்.

முன்கூட்டியே அறிந்துகொண்டு, மகிழ்ச்சியுடன் மனமுவந்து கீழ்ப்படிவது, இயேசு தம்முடைய பரலோகத் தகப்பனிடம் கொண்டிருந்த அன்பையும் அர்ப்பணிப்பையும் நிரூபிக்கிறது. தீர்க்கதரிசனத்தின் மற்றொரு நிறைவேற்றத்தைக் குறிப்பிட்டு, அப்போஸ்தலன் பவுல் இயேசுவை நம்முடைய பிரதான ஆசாரியராக அடையாளம் காட்டுகிறார்.

யோவான் 19:23"போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி, தையலில்லாமல் மேலேதொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது. "இந்த விவரம், தையல்கள் இல்லாமல் நெய்யப்பட்ட பிரதான ஆசாரியரின் மெல்லிய ஆடையில் காணப்பட்டது.

யாத்திராகமம் 39:27"ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் மெல்லிய பஞ்சு நூலால் நெசவு வேலையான அங்கிகளையும்,"மெல்லிய பஞ்சுநூல் நீதியைக் குறிக்கிறது (வெளிப்படுத்துதல் 19:8)மேலும் அது பலியிடும் பிரதான ஆசாரியரின் தூய்மையின் அடையாளமாக இருந்தது.இயேசு கிறிஸ்து தனது ஆசாரியத்துவத்தின் பலி ஆடைகளை அணிவதன் மூலம், பிரதான ஆசாரியரின் அடையாளத்தை முழுமையாக நிறைவேற்றுகிறார். இவ்வாறு, இயேசு அந்த அழகான மாதிரியை நிறைவேற்றினார்,மேலும் அவர் நிஜமான மகா பிரதான ஆசாரியரும், நமது பிரதான ஆசாரியருமாக செயலாற்றி, யெகோவா தேவனின் சித்தத்திற்கும் முழுமையான அர்ப்பணிப்புக்கும் ஒரு முன்மாதிரியாகவும் தன்னை நிரூபித்தார்.

நமது கர்த்தருடைய வாழ்க்கையின் பல அம்சங்கள் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை என்பதையும் அதன் விளைவாக பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் ஆசீர்வதிக்கப்படும் என்பதையும் அறிந்து கொள்வதில் நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

(1) பிலிப்பியர் 2:17 —"மேலும், உங்கள் விசுவாசமாகிய பலியின்மேலும் ஊழியத்தின்மேலும் நான் வார்க்கப்பட்டுப்போனாலும், நான் மகிழ்ந்து, உங்கள் அனைவரோடுங்கூடச் சந்தோஷப்படுவேன்"

(2)ஒரு ஓமர் என்பது இஸ்ரயேலர் ஒவ்வொரு நாளும் மன்னாவில் சேகரித்ததுதான் (6வது நாள் அவர்கள் 6வது மற்றும் 7வது நாட்களுக்கு இரண்டு ஓமர்கள் சேகரித்ததைத் தவிர) யோவான் 6:51ல் இயேசு தன்னை பரலோக மன்னா - பரலோகத்திலிருந்து வந்த அப்பம் - என்று அடையாளப்படுத்தினார், இதனால் மன்னாவில் குறிப்பிடப்படுகிறார்.

# வளமான அடையாளங்கள்
# கிறிஸ்துவைப் பற்றிய முன்னோட்டங்கள்



"அப்பொழுது நான் - தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (எபிரெயர் 10:7)"

— Tom Ruggirello

வேதங்களில் நமது ஆண்டவரின் பல்வேறு வளமான அடையாளங்கள் உள்ளன. இது கடவுளின் திட்டத்தில் அவரது குணாதிசயங்களின் ஆழத்தையும் பன்முகப் பாத்திரங்களையும் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டை கவனமான படிப்பு, கிறிஸ்துவை நோக்கிச் செல்லும் ஆழமான மாதிரிகளையும் நிழல்களையும் வெளிப்படுத்துகிறது. தீர்க்கதரிசிகள் தன்னைப் பற்றி எப்படிப் பேசினார்கள் என்பதை இயேசுவே விவரித்தார்.

"மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார். அவர்களை நோக்கி - மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்த போது உங்களுக்குச் சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார்."(லூக்கா24:27, 44 )செம்மறி ஆடுகள், காளைகள், சிங்கங்கள் மற்றும் புறாக்கள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகள் அவரது ஊழியத்தை முன்னறிவித்தன. இராஜாக்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் ஆசாரியர்கள் அவரது பல பாத்திரங்களை சித்தரித்தனர். அவர் பஸ்கா ஆட்டுக்குட்டியிலும் நினைவுக்கூருதலின் ஆசரிப்பின் அப்பத்திலும் திராட்சரசத்திலும் முன்நிழலாகக் காட்டப்படுகிறார். தீர்க்கதரிசனங்கள் அவருடைய பிறப்பு மற்றும் மரணத்தின் விதத்தைக் குறிக்கின்றன. பூமியின் அஸ்திவாரங்கள் போடப்படுவதற்கு முன்பே இயேசுவின் பங்கு கடவுளால் முன்னறிவிக்கப்பட்டு திட்டமிடப்பட்டது. (வெளிப்படுத்ததுல் 13:8)

பழைய ஏற்பாட்டில் இயேசுவைப் பற்றிய விரிவான குறிப்புகள் முழுமையாக ஆய்வைத் தடுக்கின்றன. இங்கே கிறிஸ்துவை நோக்கிய வாழ்க்கை வாழ்ந்த பல நபர்களில் ஒரு சிலரை மட்டுமே நாம் கருத்தில் கொள்கிறோம்.

## ஆதாம்

"அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது, அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன்." (ரோமர் 5:14 )"அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்." (1கொரிந்தியர் 15:45 )

ஆதாம் நம் இனத்தின் தந்தை. இரண்டாவது ஆதாமாகிய நம் ஆண்டவர் இயேசு, இப்போது பரிசுத்தவான்களுக்கும், விரைவில் இந்த மரிக்கும் உலகத்திற்கும் ஜீவனைக் கொடுக்கும் தந்தையாவார். ஆதாம் பாவமற்றவராகப் படைக்கப்பட்டார், சாத்தான் காட்சிக்குள் நுழையும் வரை அவர் தூய்மையான சூழலில் வாழ்ந்தார். அதே பிசாசால் மிகவும் கடினமான சூழ்நிலைகளில் சவால் செய்யப்பட்ட போதிலும். இயேசுவும் பரிபூரணராகவும், பாவத்தால் கறைபடாமல் இருந்தார். அத்தகைய உண்மைத்தன்மை ஒரு நாள் பூரணமடைந்து, மனித குடும்பத்திற்கு கடவுளுடன் குமாரத்துவத்தைக் கொண்டுவரும்.

"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப் பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்ப டிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்." (ரோமர் 5:19)"ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படு வார்கள்."(1கொரிந்தியர் 15:22)

## ஆபேல்



"ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்." (ஆதியாகமம் 4:4 )"விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான், அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான், அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார், அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்." (எபிரெயர் 11:4)

"மந்தையிலிருந்து" ஆபேல் கொடுத்த காணிக்கை, விழுந்துபோன மனிதனுக்கும் கடவுளுக்கும் உள்ள உறவை இரத்த பலியின் மூலம் மட்டுமே சரிசெய்ய முடியும் என்பதைக் காட்டியது. இதன் விளைவாக, காயீனின் "நிலத்தின் கனியை" காணிக்கையாக ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. பொறாமை கொண்டு கோபத்தில், காயீன் தன் சகோதரனைக் கொன்றான். "காயீன் தன் சகோதரனாகிய ஆபேலோடே பேசினான். அவர்கள் வயல்வெளியில் இருக்கும் சமயத்தில், காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி, அவனைக் கொலைசெய்தான்."(ஆதியாகமம் 4:8)இதேபோல், பொறாமையால் உந்தப்பட்ட அவரது யூத சகோதரர்களால் இயேசுவும் அநியாயமாகக் கொல்லப்பட்டார். (மத்தேயு *27:18*)

"புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்."(எபிரெயர் 12:24)ஆபேலின் காணிக்கை கிறிஸ்துவின் பலியைச் சுட்டிக்காட்டினாலும், அவருடைய மந்தையிலிருந்து ஒரு காணிக்கை உண்மையிலேயே பாவத்திற்கு பரிகாரம் செய்ய முடியாது. இதற்கு நேர்மாறாக, கிறிஸ்துவின் பரிபூரணமான பலியின் ஜீவியம், புதிய உடன்படிக்கையினால் உலகிற்கு நித்திய ஜீவனைக் கொண்டுவர உதவும். அப்படியானால், நம் ஆண்டவரின் பலி ஆபேலின் காணிக்கையை விட "சிறந்த காரியங்களைப்"பற்றிப் பேசுகிறது.

ஆபேலின் கொலை நீதிக்காக குரல் கொடுத்தது.(ஆதியாகமம் 4:10)இருப்பினும், கிறிஸ்துவின் இரத்தம் பழிவாங்குதலைப் பற்றி அதிகம் பேசாமல், இரக்கம் மற்றும் மன்னிப்பைப் பற்றிப் பேசுகிறது.

இஸ்ரயேலர் இயேசுவை நிராகரித்து சிலுவையில் அறைந்தது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தினாலும், இதற்கு பொறுப்பானவர்கள் கூட நம் ஆண்டவரின் பலியினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அத்தகைய இரக்கமுள்ள நோக்கம் கடவுளின் அன்பான இருதயத்தை வெளிப்படுத்துகிறது.

**மோசே**



"மோசே பிதாக்களை நோக்கி - உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார், அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக" (அப்போஸ்தலர் 3:22).

"மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, இராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு..."(எபிரெயர் 11:23-25)

அவர்கள் தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி - சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள், பரிசுத்தவான்களின் இராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்." (வெளிப்படுத்துதல் 15:3)

மோசே இஸ்ரயேலின் சட்டமியற்றுபவர், தீர்க்கதரிசி, ஆசிரியர்,மற்றும் பல வழிகளில், அவரது ஜனங்களின் மீட்பராக இருந்தார். மேலே உள்ள பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளபடி, அவரை காட்டிலும் பெரியவர் ஒருவர் வருவார் என்றும் மோசே ஒருபோதும் சாதிக்க முடியாததை எதிர்பார்க்காத அளவுக்கு அவர் சாதிப்பார் என்றும் மோசே அறிந்திருந்தார்.

இஸ்ரயேலை பாரமான மற்றும் நீண்டகால அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பதில், எகிப்திய அடிமைத்தனத்தை விட மிகவும் கொடுமையான ஒன்றிலிருந்து விடுவிப்பவராக இயேசுவை அவர் சுட்டிக்காட்டினார். பாவத்தின் சீர்குலைக்கும் அடிமைத்தனத்திலிருந்தும், அதன் தவிர்க்க முடியாத முடிவான மரணத்திலிருந்தும் இயேசு இந்த உலகத்தை விடுவிப்பார்.

கடவுளுக்கும் இஸ்ரயேல் தேசத்துக்கும் இடையில் நின்று, மோசே புதிய உடன்படிக்கையின் பெரிய மத்தியஸ்தரின் பங்கை முன்னறிவித்தார். "இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார். அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை, அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது - என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள், ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை."(எபிரெயர் 8:6, 9-11)

கிறிஸ்துவின் "சிறந்த" பலி கடவுளின் சிறந்த வாக்குறுதிகளை ஒரு யதார்த்தமாகக் கொண்டு வந்து ஒரு சிறந்த உடன்படிக்கையை நிலைநாட்டும். கடவுளுடனான மனிதனின் புதுப்பிக்கப்பட்ட உறவை ஏற்படுத்துவதே குறிப்பிடத்தக்க விளைவாகும். கடவுளுடைய பிரமாணம் ஒவ்வொரு விருப்பமுள்ள மனதிலும் இருதயத்திலும் எழுதப்படும். அன்பே கடவுளுடைய பிரமாணத்தின் அடிப்படையாக இருக்கும், உலகம் இறுதியாக நீடித்த சமாதானத்தை அறிந்துகொள்ளும்.

## அவரது ஆரம்ப துவக்கம்

மோசேக்கும் இயேசுவுக்கும் இடையிலான ஒற்றுமைகள், குழந்தைப் பருவத்திலிருந்தே தெளிவாகத் தெரிகின்றன.

ஒரு புதிய எகிப்திய பார்வோன் ஆட்சிக்கு வந்தபோது, எபிரெயர்கள் "மிகுதியும் பலுகி, ஏராளமாய்ப் பெருகிப் பலத்திருந்தார்கள்." (யாத்திராகமம் 1:7) இதை கண்ட பார்வோன் பயந்தான். அவர்களை அடிமைப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த, அவர்கள் மீது அதிகாரிகளை நியமித்தார். பின்னர் அவர் ஒவ்வொரு பிறந்த ஆண் குழந்தையையும் கொல்லும்படி எபிரெய மருத்துவச்சிகள் கட்டளையிட்டார். இந்த தந்திரமும் தோல்வியடைந்தது. விசாரித்தபோது, மருத்துவச்சிகள், எகிப்தியப் பெண்களை விட எபிரெயப் பெண்கள் "நல்ல பலமுள்ளவர்கள்" என்றும், அவர்கள் நாங்கள் போகுமுன்பே அவர்கள் தங்கள் குழந்தைகளைப் பெற்றெடுத்ததாகவும் பதிலளித்தனர்.

பின்னர் பார்வோன் எபிரெயப் பெண்களிடம் தங்கள் பிறந்த குழந்தைகளை ஆற்றில் வீசும்படி கட்டளையிட்டான். இந்த புனிதமற்ற ஆணையின் விளைவாக, மோசே பிறந்தவுடன், அவரது தாயார் அவரை ரகசியமாக மறைத்து வைத்தார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, அவள் ஒரு சிறிய கூடையைச் செய்து, தன் குழந்தையை பார்வோனின் குமாரத்தியிடம் மிதக்கச் செய்ய முடிவு செய்தாள், அவளுடைய இருதயம் தொடப்படும் என்றும், அவள் அவனைத் தத்தெடுப்பாள் என்றும் நம்பினாள். (யாத்திராகமம் 2)அவளுடைய திட்டம் வெற்றி பெற்றது, பார்வோனின் தீய நோக்கத்தின் மத்தியிலும், அதாவது மோசே தன்னைக் கொல்லக்கூடியவரின் வீட்டிலேயே வளர்ந்தார்.

குழந்தை மோசேயின் மீட்பு, குழந்தை இயேசுவின் விடுதலையைப் பிரதிபலிக்கிறது, அவரும் பிறந்த சிறிது நேரத்திலேயே ஒரு வன்முறையான மரணத்திலிருந்து தப்பினார். ஏரோது இரண்டு வயதுக்குட்பட்ட ஒவ்வொரு யூத ஆண் குழந்தையையும் கொல்ல முயற்சிப்பான் என்று யோசேப்புக்கு ஒரு தேவதூதன் கனவில் முன்னறிவித்திருந்தார்.(மத்தேயு 2:16) இதற்குப் பதிலளிக்கும் விதமாக, யோசேப்பு தனது சிறிய குடும்பத்துடன் எகிப்துக்கு ஓடிப்போனார், பின்னர் ஏரோது இறந்த பிறகு அவர் திரும்பி வருவார்.

மோசே எகிப்திய அரச குடும்ப உறுப்பினராக பல ஆண்டுகள் பயிற்சி பெற்றார். ஒரு வாலிபனாக, ஒரு எகிப்திய காவலர் ஒரு யூதரை துஷ்பிரயோகம் செய்வதைக் கண்டார், மேலும் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட மனிதன் மேல் இரக்கம் கொண்டார். எகிப்தியனைக் கொன்ற பிறகு, அந்த உடலை மோசே மறைத்து விட்டார். இதை பார்வோன் அறியும்போது தன் உயிருக்காக தப்பி ஓடிவிட்டார். இந்த நிகழ்வு மோசேயின் வாழ்க்கையில் மிக முக்கியமானதாக மாறியது. அவரது முந்தைய எகிப்தியப் பயிற்சியும், அவரது மாமனாரின் மந்தைகளை 40 ஆண்டுகள் மேய்த்துப்

பணியாற்றியதும், இஸ்ரயேலை அடிமைத்தனத்தின் கடுமையிலிருந்து விடுவிக்கும் மகத்தான பணிக்கு அவரை தயார்படுத்தியது.

மோசேயின் மனத்தாழ்மை இயேசுவின் இருதயத்தைப் பிரதிபலிக்கிறது. பரலோகத் தந்தையிடம் தனது அதிகாரத்தையும் நெருக்கத்தையும் விட்டுக்கொடுத்தல், அவரது அடக்கமற்ற இருதயத்தையும் கடவுள் மீதான முழுமையான பக்தியையும் வெளிப்படுத்துகிறது. "அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை" (யோவான் 1:2, 3)

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே, அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."(2 கொரிந்தியர் 8:9)

மோசேயைப் போலவே, இயேசுவும் தனது ஆரம்ப கால ஊழியத்திற்காக பல வருடங்கள் தயாராக இருந்தார். அவர் விருப்பத்துடன் பரலோகப் பிரகாரங்களை விட்டு வெளியேறி, பாவத்தில் விழுந்த உலகைக் காப்பாற்ற வந்தார். அவர் பிசாசின் உலக செல்வங்களை வழங்குவதை ஏற்க மறுத்து, இந்த உலகின் சாதாரண மற்றும் ஆதரவற்றவர்களுடன் அடையாளம் காணப்பட்டார்.

இஸ்ரயேலுக்கு குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தது பத்தாவது மற்றும் இறுதியான வாதையாகும். ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல் நிலைகால்களிலும் மேற்சட்டங்களிலும் தெளிக்கப்படாத வீடுகளுக்குள் உள்ள முதல் பிறந்த ஆண் பிள்ளைகளின் மரணம் ஏற்பட்டது.

இதன் விளைவாக, பார்வோனின் முதல் மகன் உட்பட எண்ணற்ற எகிப்திய குழந்தைகள் இறந்தனர். கொரிந்திய சகோதரர்களுக்கு எழுதிய போது, அப்போஸ்தலன் பவுல் இந்த குறிப்பிடத்தக்க நிழலைப் பற்றிக் குறிப்பிட்டார். "ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு பழைய புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே. (1 கொரிந்தியர் 5:7)

கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் இருப்பது, எகிப்திய அடிமைத்தனத்தை விட மிகப் பெரிய ஒன்றிலிருந்து விடுதலையை அளிக்கிறது. மரணத்தை விட நமக்குப் பெரிய எதிரி வேறு யாரும் இல்லை. அத்தகைய எதிரியிடமிருந்து விடுதலை பெறுவது உண்மையிலேயே அர்த்தமுள்ளதாக இருக்கிறது. இதை அங்கீகரிப்பது விசுவாசிகளை பாவப் போக்குகளையும் எண்ணங்களையும் தூய்மைப்படுத்தத் தூண்டுகிறது. "சொல்லப்படப்போகிற காரியங்களுக்குச் சாட்சியாக, மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு மேற்பட்டவரான குமாரனாக உண்மையுள்ளவராயிருக்கிறார், நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மைபாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில் நாமே அவருடைய வீடாயிருப்போம்." (எபிரெயர் 3:5, 6)ஒரு வேலைக்காரனுக்குக் கீழ்ப்படியும்படி கட்டளைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், ஒரு மகன் வாரிசாக இருப்பதால், சிறப்பு சலுகைகளையும் மரியாதைகளையும் பெறுகிறான். கடவுளின் புத்திரர்களாக, கிறிஸ்துவின் தியாகத்தின் காரணமாக, பரிசுத்தவான்களுக்கு ஒரு அசாதாரண சுதந்தரம் வழங்கப்படுகிறது.

"தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்." (எபேசியர் 1:18)இத்தகைய மகிமையான சுதந்தரம் உலகை ஆசீர்வதிக்கவும், நம் இறந்து கொண்டிருக்கும் இனத்திற்கு நித்திய ஜீவனைக் கொண்டுவரவும் பயன்படுத்தப்படும். அப்போது உலகம் கடவுளின் இருதயத்தை அறிந்து அதற்கேற்ப அவரை மதிக்கும். மகனாகப் பிறக்க அழைக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு வழங்கப்படும் நம்பமுடியாத பாக்கியத்தைப் புரிந்துகொண்டு, தங்கள் அழைப்பை ஒருபோதும் அசட்டை



செய்யக்கூடாது.

"எழுத்துகளினால் எழுதப்பட்டுக் கற்களில் பதிந்திருந்த மரணத்துக்கேதுவான ஊழியத்தைச்

செய்த மோசேயினுடைய முகத்திலே மகிமைப்பிரகாசம் உண்டானபடியால், இஸ்ரயேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக்கூடாதிருந்தார்களே. ஒழிந்துபோகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும் ? ஆக்கினைத்தீர்ப்புக் கொடுக்கும் ஊழியம் மகிமையுள்ளதாயிருந்தால், நீதியைக்கொடுக்கும் ஊழியம் அதிக மகிமையுள்ளதாயிருக்குமே. "(2கொரிந்தியர் 3:7-9)

மோசே கானானின் எல்லையில் நின்றபோது, வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தைப் பார்த்தார், இஸ்ரயேல் இன்னும் பல எதிரிகளை எதிர்கொண்டதை அறிந்திருந்தார். அதேபோல், திரும்பி வந்த கர்த்தர் இப்போது புதிய யுகத்தின் முன்னணியில் நிற்கிறார், மனிதன் கடவுளின் சமாதானமான இராஜ்யத்தில் முழுமையாக நுழைவதற்கு முன்பு தோற்கடிக்கப்பட வேண்டிய பல உள்ளே மற்றும் வெளிப்புற எதிரிகளை எதிர்நோக்குகிறார்.

**யோசுவா**

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையவோ அல்லது அதைத் தொடர்ந்து வந்த போராட்டங்களில் பங்கேற்கவோ மோசே அனுமதிக் கப்படாததால், புதிய தேசத்தை "உடைமையாக்க" யோசுவாவுக்குக் கட்டளையிடப்பட்டது. (உபாகமம் 3:28) வெற்றிக்குத் தேவையான அனைத்தும் வழங்கப்பட்டிருந்தன, ஆனால் கானானை வெல்வது கடினமாக இருந்தது, அதற்கு விடாமுயற்சியும் விசுவாசமும் தேவைப்பட்டது. கடவுள் தங்களோடு இருக்கிறார் என்பதை மக்கள் நம்பி, தங்கள் தலைவரின் வழிநடத்துதலைப் பின்பற்ற வேண்டும். இருப்பினும், பல இஸ்ரயேலர்கள் "அவிசுவாசத் தினால்" வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையவே இல்லை. (எபிரெயர் 3:19) அப்படியானால், யோசுவா ஒரு புதிய பாத்திரத்தில் செயல்படும் கிறிஸ்துவின் ஒரு மாதிரியாகச் செயல்படுகிறார், இவர் கடவுளுடைய இராஜ்யத்தின் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் உலகத்தை கொண்டு வரக்கூடியவர்.

நிலத்தை சொந்தமாக்குவது தனிப்பட்ட எதிரிகளை வெல்லும் வேலையை விளக்குகிறது.

ஒவ்வொரு தீய ஆசையையும் வெல்ல வேண்டும். நமக்கும் கடவுளால் நியமிக்கப்பட்ட ஒரு சிறந்த தலைவர் இருக்கிறார். நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் மீதமுள்ள பகுதிக்குள் நுழைவதற்குத் தேவையான அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. இஸ்ரயேலைப் போலவே, வெற்றி உறுதி என்று நாம் நம்ப வேண்டும், மேலும் நமது தலைவரின்



வழிநடத்துதலுக்கு தொடர்ந்து பின்பற்ற வேண்டும். " விசுவாசித்தவர்களாகிய நாமோ அந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறோம். (எபிரெயர் 4:3 )" என்று பவுல் நமக்கு உறுதியளிக்கிறார்.

அத்தகைய ஓய்வின் நடைமுறை அம்சத்தை சகோதரர் ரசல் பகிர்ந்து கொள்கிறார்.

"கடவுளின் அர்ப்பணிக்கப்பட்ட மக்கள் அனைவரும் தங்களுக்கு ஓய்வு, அமைதி, மகிழ்ச்சி, ஆசீர்வாதம் கிடைத்திருப்பதாக சாட்சியமளிக்க முடியும், அதை உலகம் கொடுக்கவோ எடுத்துக்கொள்ளவோ முடியாது - இது அவர்களின் விசுவாசத்திற்கும் விகிதாசாரமாகும்." ஆனாலும் இவை அனைத்தும் கூட போதுமானதாக இல்லை. கடவுள் இதைவிடச் சிறந்த ஒன்றை முன்னேற்பாடு செய்திருக்கிறார். இதைக் கருத்தில் கொண்டு, அப்போஸ்தலனாகிய பவுல் - "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது."என்று அறிவிக்கிறார். (எபிரெயர் 4:9 )ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு ஒரு இளைப்பாறுதல் இன்னும் இருக்கிறது.

"முதலாம் உயிர்த்தெழுதலில் புது சிருஷ்டிகள் பூரணப்படுவதன் மூலம் பரலோக ஓய்வுக்குள் பிரவேசிப்பார்கள். உலகம், மாம்சம் மற்றும் பிசாசுக்கு விரோதமாக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவதில் அவர்களுடைய உண்மைத்தன்மையும் விசுவாசமும் நிரூபிக்கப்பட்டிருப்பதால்,"ஒரு கண் இமைக்கும் நேரத்தில்" ஒரு மகிமையான மாற்றத்தை அவர்களுக்குக் கர்த்தர் வாக்களித்திருக்கிறார். அதாவது தேவதூதர்கள், துரைத்தனங்கள் மற்றும் வல்லமைகளுக்கு மேலாக தெய்வீக இயல்பின் பரிபூரணத்தில், ஆண்டவருடைய உயிர்த்தெழுதலில்

பங்கடைவார்கள்.மேலும் அவர்கள் ஆண்டவரோடு இணைவதினால் மகிமையான மேசியாவின் இராஜ்யத்தில் இந்த உலகமும் ஆசீர்வதிக்கப்படும்." (லூக்கா 12:32) (Reprint 5345)

ஒவ்வொரு அனுபவத்தையும் விசுவாசத்தோடு எதிர்கொள்ளும் போதுதான் கடவுளின் இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கக் கற்றுக்கொள்வது தொடங்குகிறது. சில நேரங்களில் எழும் பயத்தைக் கட்டுப்படுத்தவும், கடவுள் நம்மை ஒருபோதும் கைவிட மாட்டார் என்று நம் இருதயங்களில் உறுதியாக நம்பவும் கற்றுக்கொள்கிறோம். புது சிருஷ்டியின் பயணத்தில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் யோசுவாவுக்கு கர்த்தர் அளித்த வாக்குறுதி ஆறுதலளிக்கிறது. "நான் உனக்குக் கட்டளையிடவில்லையா ? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்." (யோசுவா 1:9)

இந்தக் கொள்கை இராஜ்யத்தில் மனுக்குலத்திற்கும் பொருந்தும். பல தனிப்பட்ட எதிரிகள் தோற்கடிக்கப்படுவார்கள், மேலும் அன்பு ஒவ்வொரு விருப்பமுள்ள இருதயத்தையும் நிரப்பும். இருதயம் முழுமையடைந்தவுடன், பாவத்தில் மனிதனின் நீண்ட வருட அனுபவம் அதன் விலைமதிப்பற்ற பலனைத் தரும். அந்த மகிமையான நாளுக்காக நாம் எவ்வளவு ஏங்குகிறோம்!



### இன்றைய தீர்க்கதரிசனம்

# வரிகள் மற்றும் கட்டணங்கள்

"ஐந்தில் ஒன்று பார்வோனுக்குச் சேரும் வாரம் என்று யோசேப்பு இட்ட கட்டளைப்படி எகிப்து தேசத்திலே இந்நாள் வரைக்கும் நடந்து வருகிறது, ஆசாரியரின் நிலம் மாத்திரம் பார்வோனைச் சேராமல் நீங்கலாயிருந்தது." (ஆதியாகமம் 47:26)

ராபர்ட் பிளாக்வில் மற்றும் ஜெனி.:.பர் ஹாரிஸ் ஆகியோர் தங்கள் 2016 புத்தகமான "வார் பை அதர் மீன்ஸ்" (War by Other Means) இல், அமெரிக்கா வரலாற்று ரீதியாக பல நாடுகளைப் போல அதன் அரசியல் இலக்குகளை அடைய பொருளாதார கருவிகளைப் பயன்படுத்துவதில் ஆக்ரோஷமாக இருந்ததில்லை என்று வாதிடுகின்றனர். ஜனாதிபதி டிரம்ப் இரண்டு நோக்கங்களுக்காக வர்த்தக வரிகளை தனது வெளியுறவுக் கொள்கையின் முக்கிய பகுதியாக ஆக்கியுள்ளார் - அரசாங்கத்திற்கு வரி வருவாயை ஈட்டுவது மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை அதிக விலைக்கு மாற்றுவதன் மூலம் உள்ளூர் தொழில்களைப் பாதுகாப்பது.

இது பண்டைய காலங்களிலிருந்தே வழக்கமாக இருந்து வருகிறது. உதாரணமாக, ரோமானியப் பேரரசு உள்ளூர் உற்பத்தியை ஆதரிப்பதற்கும் வரி வருமானத்தை அதிகரிப்பதற்கும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு வரிகளைக் விதித்தது. இதேபோல், இடைக்காலத்தில் ஐரோப்பிய மன்னர்கள் பொரும்பாலும் வணிகக் கப்பல்களுக்கு வரிகளை விதித்தனர், இது பிராந்திய வர்த்தகத்தை



ஊக்குவிக்கும் வர்த்தக வழிகள் மற்றும் சந்தைகளின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.

வணிகவாதம் வளர்ந்ததால் 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் வரிகள் அதிகரித்தன, மேலும் வர்த்தகத்தின் மூலம் தேசிய சக்தி மற்றும் செல்வம் இரண்டும் அதிகரித்தன. நாடுகள் தங்கள் வளர்ந்து வரும் தொழில்களைப் பாதுகாக்கவும் வர்த்தக உபரிகளை உறுதி செய்யவும் இறக்குமதிகள் மீது அதிக வரிகளை விதிக்கத் தொடங்கின. எடுத்துக்காட்டாக, இங்கிலாந்தில் உள்ள வழி செலுத்தல் சட்டங்கள் (Navigation Acts), தாய் நாட்டிற்கு கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும் பொருளாதார நன்மைகளைப் பெறவும் காலனித்துவ வர்த்தகத்தை ஆங்கிலக் கப்பல்களுக்கு மட்டுப்படுத்தியது.

### வர்தகப் போர்கள்

தொழில் புரட்சி பொருளாதார நிலைப் பாங்கை கடுமையாக மாற்றியது. தொழில்கள் விரிவடைந்து பொருளாதாரங்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதால், மிகவும் கட்டமைக்கப்பட்ட கட்டண முறை உருவானது. அமெரிக்கா 1789 ஆம் ஆண்டில் அதன் முதல் குறிப்பிடத்தக்க கட்டணத்தை இயற்றியது, இது அமெரிக்க உற்பத்தியாளர்களைப் பாதுகாப்பதன் மூலமும் அத்தியாவசிய வருவாயை உருவாக்குவதன் மூலமும் வளர்ந்து வரும் பொருளாதாரத்தை ஆதரிக்க வடிவமைக்கப்பட்டது. இது தெற்கு விவசாயிகளுக்கும் வடக்கு தொழிலதிபர்களுக்கும் இடையே கட்டண விவாதங்களுக்கு வழிவகுத்தது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வரிகள் தொடர்பான பதட்டங்கள் அதிகரித்தன, இதன் விளைவாக வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்ட முக்கியமான சட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1890 ஆம் ஆண்டின் வரிச் சட்டம் (மெக்கின்லி வரி) இறக்குமதி வரிகளை வரலாற்று உச்சத்திற்கு உயர்த்தியது, இது கடுமையான எதிர்ப்பைத் தூண்டியது மற்றும் முற்போக்கு இயக்கத்தின் வளர்ச்சியைத் தூண்டியது, இது 1890 களில் இருந்து 1920 கள் வரை அமெரிக்காவில் நீடித்த சமூக செயல்பாடு மற்றும் அரசியல் சீர்திருத்தத்தின் பரந்த காலகட்டமாகும். இது அரசியல் ஊழல், வறுமை, சமூக சமத்துவமின்மை மற்றும் தொழில்மயமாக்கலின் எதிர்மறையான தாக்கங்கள் போன்ற பிரச்சினைகளைக் கையாண்டது. பெரும் மந்தநிலையின் போது ஏற்பட்ட பொருளாதார சரிவுக்கு பதிலளிக்கும் விதமாக, 1930 ஆம் ஆண்டின் ஸ்மூட் - ஹாலி வரி அமெரிக்க

தொழில்களைப் பாதுகாக்க வரிகளை உயர்த்தியது, ஆனால் இதனால் பிற நாடுகளின் எதிர்வினை ஏற்பட்டு, உலக பொருளாதார நிலைமை மேலும் மோசமடைந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, 1947 இல் நிறுவப்பட்ட வரிகள் மற்றும் வர்த்தகம் தொடர்பான பொது ஒப்பந்தம் (GATT), வரிகளைக் குறைப்பது மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் பலதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை நோக்கி ஒரு பெரிய மாற்றத்தைக் குறித்தது. இது ஒரு மாற்றத்திற்கான நேரமாகும், ஏனெனில் வர்த்தக தடைகளைக் குறைப்பது பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்பதை நாடுகள் அங்கீகரித்தன.

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், வரிகளின் இயக்கவியல் தொடர்ந்து பரிணமித்தது. 1995 இல் நிறுவப்பட்ட உலக வர்த்தக அமைப்பு (), வரி குறைப்புகளை மேலும் ஊக்குவித்தது மற்றும் நாடுகளிடையே சுதந்திர வர்த்தகக் கொள்கைகளை ஆதரித்தது. இருப்பினும், பாதுகாப்புவாத உணர்வுகளின் சமீபத்திய எழுச்சி, வரிகள் குறித்து விவாதங்களை மீண்டும் தூண்டியுள்ளது. குறிப்பாக, ஐக்கிய உலக வர்த்தக அமைப்பு நாடுகளுக்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தகப் போரில் கணிசமான வரி அதிகரிப்புகள் இருந்தன, இது உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதையும் உலகளாவிய வர்த்தகத்தை வளர்ப்பதையும் எவ்வாறு சமநிலைப்படுத்துவது என்பது குறித்த விவாதங்களைத் தூண்டியது. வரி தொடர்பான சட்டங்களைப் பின்பற்றுவது நமது கடமை என்பதை இயேசுவும் பவுலும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர் (மாற்கு12:17, ரோமர் 13:1-7)



## யோசேப்பின் வரிவிதிப்பு

எகிப்தின் விஜியராக இருந்த யோசேப்பின் உதாரணம், ஒத்துழைப்பு எவ்வாறு ஆட்சியின் அனைத்து அம்சங்களுக்கும் பயனளிக்கும் என்பதை தெளிவாகக் காட்டுகிறது. எகிப்திய ஜனங்கள் தங்கள அறுவடையில் 20% வரியை பார்வோனுக்கு செலுத்த வேண்டும் என்று ஒரு நிலச் சட்டத்தை அவர் நிறுவினார். ஆதியாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, பஞ்சத்தின் போது பட்டினியைத் தடுக்க உதவிய ஒரு முக்கியமான உத்தி இது. பார்வோனின் கனவுகளை விளக்கிய பிறகு, அடுத்த ஏழு ஆண்டு பஞ்சத்திற்குத் தயாராகும்படிக்கும், செழிப்பான ஏழு ஆண்டுகளில் மிகுதியான தானியங்களைச் சேமிக்க யோசேப்பு அவருக்கு அறிவுறுத்தினார் (ஆதியாகமம் 41:29-30) இது யோசேப்பின் ஞானத்தை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், எகிப்துக்கும் அவரது குடும்பத்திற்கும் ஒரு மீட்பராக அவரது பங்கை எடுத்துக்காட்டுகிறது. (யோசேப்பு இறந்து புதிய பார்வோன் ஆட்சிக்கு வந்த பிறகு இது இறுதியில் எபிரெய ஜனங்களை அடிமைப்படுத்த வழிவகுத்தது.) பஞ்சம் ஏற்பட்டபோது, சேமிக்கப்பட்ட தானியம் பலருக்கு உயிர்நாடியாக மாறியது. "எகிப்து தேசமெங்கும் பஞ்சம் உண்டானபோது, ஜனங்கள் உணவுக்காகப் பார்வோனை நோக்கி - ஓலமிட்டார்கள், அதற்குப் பார்வோன் நீங்கள் யோசேப்பினிடத்துக்குப் போய், அவன் உங்களுக்குச் சொல்லுகிறபடி செய்யுங்கள் என்று எகிப்தியர் எல்லாருக்கும் சொன்னான்." (ஆதியாகமம் 41:55) யோசேப்பு, ஜனங்கள் தங்களைத் தாங்களே தக்க வைத்துக் கொள்ள உதவும் வகையிலும், நாடு பொருளாதார ரீதியாக நிலைத்திருக்கத்தக்க விதத்திலும், தானியத்தை நியாயமான விலைக்கு விற்கும் ஒரு முறையை ஏற்படுத்தினார்.

மேலும், வசூலிக்கப்பட்ட வரிகள் எகிப்து ஒரு முக்கிய காலகட்டத்தில் செல்வத்தை வளர்க்கவும் வளங்களை சேகரிக்கவும் உதவியது. இந்த அமைப்பை நிறுவுவதன் மூலம், யோசேப்பு தனது குடும்பம் பட்டினி கிடப்பதைத் தடுத்தது மட்டுமல்லாமல், எகிப்தின் எதிர்கால செழிப்புக்கும் அடித்தளம் அமைத்தார். பஞ்சத்தின் போது யோசேப்பின் நடவடிக்கைகள் நெருக்கடி காலங்களில் மூலோபாய திட்டமிடல் மற்றும் வள மேலாண்மையை நிரூபிக்கின்றன, இது வேத கதைகளில் காணப்படும் தொலைநோக்கு மற்றும் பொறுப்பின் கருப்பொருள்களை பிரதிபலிக்கிறது. இந்த அணுகு முறை சாலமோனின் அணுகுமுறையிலிருந்து வேறுபட்டது, அவருடைய வரிகள் கோயில் மற்றும் அவரது அரண்மனை

போன்ற பெரிய அளவிலான கட்டுமானத் திட்டங்களுக்கு நிதியளித்தன. 1இராஜாக்கள் 4:7 மற்றும் 1இராஜாக்கள் 9:15-23 ஆகியவை, குறிப்பாக இஸ்ரயேலரல்லாத மக்களிடம் விதிக்கப்பட்ட வரிகளும் கட்டாயப்பணியும் இந்தப் பணிகளை எவ்வாறு ஆதரித்தன என்பதையும் விளக்குகின்றன. (1இராஜாக்கள் 12:4 , 2 நாளாகமம் 10:4) யோசேப்பின் உந்துதல் சாலொமோன் மற்றும் நவீன தலைவர்களிடமிருந்து வேறுபட்டது. அப்போஸ்தலன் பவுல் தனது விசுவாச வீரர் களின் விரிவான பட்டியலில் யோசேப்பைக் குறிப்பிடுகிறார். இந்த வீரர்களின் வாழ்க்கைக் கதைகளில் காட்டப்பட்ட விசுவாசம், தேவனுக்கு முன்பாக அவர்களுக்கு ஒரு "நற்சாட்சியை" பெற்றுத் தந்தது (எபிரெயர் 11:2) அவர்களின் விசுவாசம் ஒரு சிறந்த, பரலோக தேசத்திற்கான நம்பிக்கையால் உந்தப்பட்டது என்று பவுல் விளக்குகிறார். (எபிரெயர் 11:13-14, 16)

யோசேப்பின் விசுவாசம் பார்வோனுக்கு முன்பாகப் பேசவும், பார்வோனின் கனவின் விளக்கத்தை வழங்கவும் அவருக்குத் தன்னம்பிக்கை அளித்தது. "அப்பொழுது யோசேப்பு பார்வோனுக்குப் பிரதியுத்தரமாக - நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான். இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும் பொருட்டு, இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது. (ஆதியாகமம் 41:16, 32)

யோசேப்பு எகிப்து ஜனங்களுக்கு அத்தியாவசிய உணவை புத்திசாலித்தனமாக விநியோகித்தார். இருப்பினும், இது இலவசமாக வழங்கப்படவில்லை, மாறாக ஒரு விலைக்கு விற்கப்பட்டது. ஜனங்களிடம் பணம் இல்லாதபோது, யோசேப்பு அவர்களை தங்கள் கால்நடைகள், குதிரைகள் மற்றும் மந்தைகளை வர்த்தகம் செய்யும்படி கட்டாயப்படுத்தினார். இவை இல்லாதபோது, அவர்கள் தங்கள் நிலங்களை விற்று, இறுதியில், தங்களையே பார்வோனின் ஊழியர்களாக விற்றனர் (ஆதியாகமம் 47:13-19) இந்த முன்னேற்றம், மக்கள் தேவனுக்கும் அவருடைய இராஜ்யத்திற்கும் செய்யத் தயாராக இருக்கும் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. உலகம் ஆவிக்குரிய ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சிக்கான தேவையை புரிந்து கொள்ளும் போது, அவர்கள் இயேசுவிடம் தங்களை ஒப்படைப்பார்கள், இது தேவனின் ஊழியர்களாக அவர்களின் முழு அர்ப்பணிப்பைக் காட்டும் (நீதிமொழிகள் 23:26 , வெளிப்படுத்தல் 21:24 ஐப் பார்க்கவும்)

யோசேப்பின் வாழ்க்கை, ஒரு மனிதனை தனது குடும்பத்தினரையும் எகிப்தில் வசிப்பவர்களையும் காப்பாற்ற தேவன் எவ்வாறு பயன்படுத்தினார் என்பதை விளக்கும் ஒரு மனித நாடகமாகும். யோசேப்பின் அனுபவங்களுக்கும், நமது கர்த்தரின் கடந்த கால மற்றும் எதிர்கால வாழ்க்கைக்கும் இடையிலான ஒற்றுமைகள் தெளிவாகத் தெரிகிறது. உயிரைப் பாதுகாக்க இயேசு உலகிற்கு அனுப்பப்பட்டார். அது துன்பங்கள் நிறைந்த ஒரு பலியாகும். இருப்பினும், அது மனுக்குலத்திற்குக் கொண்டுவரும் பெரிய நன்மைகளைப் புரிந்து கொண்டதால் அவர் மனமுவந்து செலுத்திய விலை அது. அவரது பூமிக்குரிய வாழ்க்கையில், அவரது சகோதரர்களில் பெரும்பாலோர்" அவரை அறியவில்லை" (யோவான் 1:10) ஆனால் ஒரு நாள் அவர் அவர்களுக்காகவும் நம் ஒவ்வொருவருக்கும் என்ன செய்தார் என்பதைப் புரிந்து கொள்வார்கள், மேலும் மனுஷகுமாரன் இப்போது பிரபஞ்சத்தின் பெரிய இராஜாவுக்கு சேவை செய்கிறார் என்பதில் அனைவரும் மகிழ்ச்சியடைவார்கள். நீண்டகாலமாக வாக்களிக்கப்பட்ட இராஜ்யத்தின் வெகுமதிகளை அனைவரும் அனுபவிப்பார்கள். முன்மாதிரியான யோசேப்பு தன்னை ஒரு விருப்பமுள்ள ஊழியராக மாற்றினார், கனவுகளை நிறைவேற்றினார், இப்போது மனுக்குலத்திற்கு ஒரு திறமையான ஊழியராக இருக்கிறார் என்பதில் நாம் எவ்வளவு மகிழ்ச்சியடைகிறோம்.



## இசேுவின் நாமம் எவ்வளவு இனிமையாக ஒலிக்கிறது

ஒருவிசுவாசியின் காதில் இயேசுவின் நாமம் எவ்வளவு இனிமையாகஒலிக்கிறது!
அதுஅவனுடையதுக்கங்களைத் தணிக்கிறது, அவனுடையகாயங்களைக்
குணப்படுத்துகிறது, அவனுடைய இருதயத்தின் பயத்தைப் போக்குகிறது.
பசியுள்ளஆத்துமாவுக்கு இது மன்னாவாகவும், சோர்வடைந்தஆத்துமாவுக்கு இது
இளைப்பாறுதலாகவும் உள்ளது.
அன்புள்ள இந்தநாமமே!நான் கட்டப்படும் கன்மலையும், என் கேடயமும் என்
மறைவிடமுமாம்
அளவற்றகிருபையின் களஞ்சியங்களால் நிரம்பிய, என்றும் தவறாதஎன் பொக்கிஷம்!
இயேசுவே, என் மேய்ப்பர், சகோதரர், சிநேகிதர், என் தீர்க்கதரிசி, என் ஆசாரியார்
மற்றும் இராஜா, என் ஆண்டவரே, என் வாழ்க்கை, என் வழி, என் முடிவும், நான்
கொடுக்கும் துதியைஏற்றுக்கொள்பவர்.
அதுவரைஒவ்வொருநொடிப் பொழுதிலும் உமதுஅன்பைநான்
பிரகடனப்படுத்துவேன்;
உமதுநாமத்தின் இசைமரணத்தில் என் ஆத்துமாவைப் புதுப்பிக்கட்டும்.

*– John Newton*